# முரசொலி

ஆசிரியர்

வார இதழ் — மு. கருணாநிதி

முரசு 3 | 19—10—56 | வெள்ளி | ஒலி 28


## புண்ணிய பாரத் “பூங்கா விநோதம்!”



# ஏன் வேண்டும் இன்பத் திராவிடம்?

(?) இருபதாம் நூற்றாண்டின் அரசியலில் ஒரு மாபெரும் மாற்றம் காணப்படுகிறது. உலக அரசாங்கம், சர்வ தேசியம்—என்ற முறையிலேயே எல்லோரும் எந்தப்பிரச்சினையையும் ஆராய்கின்றனர். இந்நிலையில் சின்னஞ் சிறிய திராவிட நாட்டிற்கு விடுதலை கேட்பது குறுகிய சிந்தனையைக் காட்டவில்லையா?

**திராவிட நாட்டுப் பிரிவினை வேண்டாமென்று வாதிடும் தோழர்களுக்கான சந்தேக விளக்கமே இந்தக் கட்டுரை.**

பல நூறு மைல்களையும், பல ஆயிரம் உயிர்களையும் அழித்தொழிக்கும் அணு ஆயுதங்கள் ஏராளமாய்த் தயாராகிடும் இந்த வேளையில் போரை நிறுத்துவதற்கு அறிஞர்கள் பலர் பல வழி முறைகளை உபதேசிப்பது நமக்குத் தெரிந்ததே!

அதைப் போலவே போரினை மனிதகுல வரலாற்றிலிருந்தே அகற்றிவிட, உலகத்துக்கெல்லாம் ஒரு அரசாங்கம் அமைப்பதே சாலச்சிறந்தது, எனவும் பலர் போதிய எடுத்துக் காட்டுக்களோடு இயம்பி வருகின்றனர். துவக்கத்தில் ஒரு இனிய தத்துவமாகத் தோன்றிய இந்த வாதம் இப்போது என்றாவது ஒரு நாள் சாத்தியமாகக்கூடிய செயல் முறையாகவே கருதப் படுகிறது.

ஆனால் இது ஒன்றை வைத்துக்கொண்டே ஒரு நாட்டின் உரிமைக் குரலைத் தாழ்த்திவிடக் கருதுவது, சாதாரண பழமொழியைக் கூற வேண்டுமானால் அமாவாசையையும், அப்துல் காதரையும் இணைத்து வைப்பது போலாகும்.

உலகத்தில் எந்த நாடும் இனி எப்போதோ தோன்றப் போகும் ஒரு சர்வதேச அரசாங்கத்தை எண்ணி, தங்களுக்குச் சுதந்தரம் தேவையில்லை என்று கூறியதாக வரலாற்றில் சான்றே கிடையாது.

அது போலவேதான் இன்று எழுச்சியுகம் காணுதற்கு எழுந்து விட்ட சீனத்தில் முன்பு டாக்டர் சன்யாட்சென் உரிமைச் சங்கம் முழக்கிய போது இப்படித்தான் சர்வ தேசியம் பேசினர், பலர்! அப்போது; அறியாமை இருள் மண்டிக்கிடந்த எல்லோரது அகக் கண்களையும் திறந்திடும் வகையில் சன்யாட்சன் காட்டிய குறிப்புகள் இன்றுகூட நம்மனோர்க்கு எடுத்துக் காட்டும் தன்மையில் இருக்கின்றன.

"மஞ்சு இனத்தவர் பெரிய சுவரைத் தாண்டி சீனாவில் அடியெடுத்து வைத்தபோது அவர்கள் தொகை சிறியதாகத்தான் இருந்தது; அவர்கள் எண்ணிக்கையில் சுமார் 100,000 பேர்தான் இருந்தனர் ஆனால் பிறகு எப்படி இந்த 100,000 பேர்களால் பல மில்லியன் தொகையுள்ள சீனர்களை அடக்கி வைக்க முடிந்தது? ஏனெனில் பெரும்பான்மையான சீனர்கள் அந்த நேரம் சர்வ தேசியத்தை ஆதரித்துக் கொண்டிருந்தனர்; தேசியத்தைப் பற்றி வாய் திறக்காமலிருந்தனர்; அதனால்தான்?"

—சன்யாட்சென் கூறுகிறபடி சர்வ தேசியம் பேசியதால் கோடிக்கணக்கான சீனர்கள் கைபளவே உள்ள மஞ்சுக்களால் சுரண்டப்பட்டனர்; சுகமிழந்தனர்; சோம்பேறிகளாய் வாழ்ந்தனர்!

அங்கே சர்வ தேசியம் கொழுந்து விட்டு எரிந்த விடுதலைக் கனலை அழிப்பதற்காகப் பயன்படுத்தப்பட்டது!

இப்போதும் அது ஆதிக்க புரியினரால் அப்படித்தான் பயன்படுத்தப்படுகிறது!

அகில உலகமும் ஒரு குடைக்கீழ் திரளும்போது திராவிட நாட்டுப் பிரிவினையா?—அங்கலாய்க்கின்றனர் வெறும் பொழுதுபோக்கிற்காக மட்டுமே அரசியல் பேசும் மேதாவிகள் சிலர்!

இதே கேள்வியை 1947-ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 15-ம் தேதியன்று நம்மால்கூட திருப்பிக் கேட்டிருக்க முடியுமே!

"ஆகஸ்ட் 15-ல் பூரண சுதந்தரம் பெற்ற வீரர்களே! உலகமெல்லாம் ஒரே அரசாக மாறும் வேளை வந்துகொண்டிருக்கும்போது நீங்கள் ஏன் இந்தியாவுக்கு விடுதலை கேட்கிறீர்கள்?

"வெள்ளையன் என்ன பூமியிலிருந்து இந்தியா என்னும் நிலப் பரப்பைப் பெயர்த்தெடுத்து கடலுக் கடியில் சென்று மறைத்து விடப்போகிறான்? நாளை உலக அரசாங்கம் வருவதற்குள் ஏன் அவசரப்பட்டு வெள்ளையனை—ஒரு உலகப் பிரஜையை விரட்டி விட்டீர்?"

—குறும்பு செய்வதொன்றையே குறிக் கோளாகக் கொண்டிருந்தால் இதைக் கேட்டிருக்கலாமே, நாம்!

அது மட்டுமல்ல; காலனி ஆதிக்கம் ஒரு அகில உலக அரசாங்கம் ஏற்படுவதற்கு வழி செய்யுமென்று கூட வாதத்திற்காக நம்மால் நிரூபித்திருக்க முடியுமே!

உதாரணமாக பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்தின் பிடியில் இந்திய உபகண்டம் இருப்பதாக வைத்துக் கொள்வோம். இதே முறையில் எல்லா ஆசிய நாடுகளையும் பிரிட்டன் பிடித்துக்கொள்வதற்கு 'சர்வதேசம் பேசி'கள் ஊக்குவிக்க வேண்டும்.

அதே போலவே அமெரிக்கா, ரஷ்யா போன்ற பெரிய நாடுகளையும் சிறு நாடுகளை விழுங்குவதற்கு அனுமதிக்க வேண்டும். அப்போது மூன்று அல்லது நான்கு பெரிய வல்லரசுகளின் கைப்பிடியில் இந்த உலகம் வந்து விடும்.

பிறகு; உலக அரசாங்கம் ஸ்தாபிக்க நூற்றுக்கணக்கான அரசாங்கங்களையோ அல்லது நாடுகளையோ அணுகுவதற்கு வேண்டிய அவசியம் ஏற்படாது.

மூன்று அல்லது நான்கு வல்லரசுகளுடைய மனதை வயப்படுத்தினாலே போதும்; ஒரு உலக அரசாங்கம் ஏற்படுத்திவிட முடியும்!

—இந்த முறை சுலபமாகத் தெரிகிறதே என்பதற்காக எந்தச் 'சர்வ தேசம் பேசி'யாவது காலனி ஆதிக்கத்தை ஆதரிப்பார்களா? இந்தியா விடுதலை பெற்றது அமைய இருக்கும் அரசாங்கத்தைத் தாமதப் படுத்தி விட்டது—என்று கூக்குரல் எழுப்புவார்களா?

நிச்சயம் அப்படிச் செய்ய மாட்டார்கள்.

ஏன்?

தேச விடுதலை வேறு; சர்வ தேசியம் வேறு — என்றுதான் அவர்கள் கூறுவார்கள்.

இதையேதான் 1942-ம் ஆண்டு டாக்டர் சன்யாட்சென் விதண்டாவாதிகளைப் பார்த்துக் கூறினார்:

"நாம் இப்போது சீனத்தின் இழந்த தேசியத்தைப் புதுப்•

※ தொடர்ச்சி 10-ம் பக்கம்

## தி. மு. கழக தேர்தல் ஆய்வுக்குழு

### கூட்ட அழைப்பு

(எல்லா தி. மு. கழக உறுப்பினர்களுக்கும், ஆதரவாளர்களுக்கும்)

அன்புடையீர்!

தேர்தல் பற்றிய சூழ்நிலையை ஆராயவும், தி. மு. கழகத்தின் தேர்தல் ஈடுபாடு குறித்து விவாதிக்கவும், தேர்தல் ஆய்வுக் குழுவினரான தோழர்கள் ஈ. வி. கே. சம்பத், கே. ஏ மதியழகன், என். வி. நடராசன், ஏ. வி. பி, ஆசைத்தம்பி இவர்களுடன் பொதுச் செயலாளர் இரா. நெடுஞ்செழியன் அவர்களும் நம் மாவட்டத்திற்கு கீழ்க்கண்டபடி வருகை தருகிறார்கள்.

| காலம்-நேரம் | இடம் | விவாதிக்கப்படும் தொகுதிகள் |
|---|---|---|
| 22—10—56 காலை 9 மணி | பட்டுக்கோட்டை காசாங்குளம் வடகரை சத்திரம் ஓய்வு விடுதி | (1) அறந்தாங்கி (2) அதிராம்பட்டினம் (3) பட்டுக் கோட்டை (5 மன்னார்குடி (5) திருத்துறைப்பூண்டி – 2. |
| 22—10—56 மாலை 3 மணி | தஞ்சாவூர் கொண்டிராஜ பாளையம் பொன்னாப் பூண்டார் சத்திரம் (தண்ணீர் பந்தல்) | (1) தஞ்சாவூர் (2) கந்தர்வ கோட்டை (3) திருவையாறு (4) பாசநாசம்-2 (5) கும்பகோணம். |
| 22—10—56 மாலை 6 மணி | மாயூரம் ஜங்ஷன் பக்கம் முனிசிபல் ஓய்வு விடுதி | (1) சீர்காழி-2 (2) மாயூரம் (3) ஆடுதுறை (4) நன்னிலம் (5) நாகப்பட்டினம் (6) திருவாரூர் – 2 |

அருள்கூர்ந்து தாங்கள் வருகை தந்து ஆய்வுரைகள் வழங்கி கூட்டத்தைச் சிறப்பிக்க வேண்டுகிறேன்,

அதிராம்பட்டினம் |
14—10—56 |

அன்பன்,
என். எஸ். இளங்கோ.




சென்னை 19-10-56 வெள்ளி

# காமராசரின் கொலை பாதகம்!

நெஞ்சு உலுக்கும் செய்தி; நஞ்சு நிகர் நோக்கம் கொண்டோர் இந்த மாநிலத்து முதல்வர்—என்பதை நாடெங்கும் அறிவிக்கும் செய்தி; உண்ணா நோன்பினால் ஒரு தமிழ் மகன் இறந்தானென்ற செய்தியாகும்.

நம் இதயம் வேகிறது; உதயமாகி விட்டதாகச் சொல்லப்படுகிற ஜனநாயகம் அஸ்தமித்து விடுமோ—என்ற ஐயம் கனை உருவெடுத்துத் துளைக்கிறது, காமராசரின கல் நெஞ்சத்தை நினைக்கும்போது!

கடைசி நேரத்தில் அவர் விடுத்திருந்த அறிக்கை மனிதத் தன்மை படைத்தவர் அனைவர் உள்ளத்தையும் உருக்குவதாக இருக்கிறது.

"அம்மா! தமிழ்த் தாயே—இந்திய மாதாவே!

இன்றைய நிலை கண்டு மனம் நொந்து வாடுகிறது. உணவுப் பஞ்சம் மட்டுமல்ல. திரு. ஜவஹர்லால் நேரு, திரு. கோபால ரெட்டியார், திரு. காமராஜ் முதலிய முதல் மந்திரிகளிடம் அறிவுப் பஞ்சம் ஏற்பட்டு வருகிறது.

குஜராத்—மஹாராஷ்டிரா கூட்டு அமைப்பு ராஜ்ய அமைப்பை எதிர்த்து பலமான எரிமலை வெடிக்க இருக்கும் நேரத்தில் குஜராத் மஹாராஷ்டிரா தனித் தனி மொழிவாரி இராஜ்ஜியம் இல்லை என்றும், குஜராத்—மஹாராஷ்டிரா இராஜ்ஜியம் உறுதி என தீர்ந்துவிட்ட விஷயம் என்றும் திரு. ஜவஹர்லால் நேரு கூறியிருக்கிறார்.

சென்னைக்கு மறியலுக்குச் சென்ற தமிழ்நாடு வட எல்லைப் போராட்டத் தியாகிகளை ஆந்திர முதல் அமைச்சர் திரு. கோபால் ரெட்டியார் கண்டிக்கிறார். சென்னை, ஆந்திரா மறுபடியும் ஒன்றுசேர வேண்டுமென்று கர்நூலில் திரு. காமராஜ் கூறியிருக்கிறார். குறிப்பிட்ட மொழிவாரி பிரதேச இராஜ்யங்கள்தான் காந்திஜியின் கொள்கை. இதை இன்று விநோபாஜியும் ஆதரிக்கிறார். முதல் மந்திரிகளின் போக்கு நியாய மற்றது. கொடுமையானது.

மகாத்மாஜி அண்ணலின் இலட்சியக் கொள்கைகளுக்கும் பொது ஜனங்களின் விருப்பத்துக்கும் மாறாக தவறான வழியில் கண் மூடித் தனமாய்ப் போய்க் கொண்டிருக்கும் காங்கிரஸ் ஆட்சி ஒழிந்தே தீரும்—அறிவுத் திறன் இருந்தால் திருந்திக்கொள்ளட்டும்.

காங்கிரஸ் சர்க்கார் திருந்தாவிட்டால், பட்டினிப் பட்டாளம், பசிப் பட்டாளம், வேலையில்லாத் திண்டாட்டப் பட்டாளம், மொழிவாரி இராஜ்ஜிய அமைப்புப் பட்டாளங்கள் - இன்னும் பல குறைபாடுகள் உள்ள பட்டாளங்கள் - பட்டாளம், பட்டாளமாக கிளம்பி காங்கிரஸ் ஆட்சியைத் தகர்த்தெறிவது நிச்சயம்.

காங்கிரஸ் சர்க்காரே! இந்த தவறு வேண்டாம். பதவி மோகமும் அதிகாரச் செருக்கும் வேண்டாம். ஏழை நாட்டின்மீது கிருபை கூர்ந்து அதிகப்படியான பொது ஜனக் கஷ்டங்களை நீக்க வழி தேடுங்கள்."

ஆனால் இரும்பு உள்ளத்தையும் இளகச் செய்யும் இந்த அறிக்கை கண்டும்கூட காமராசரது மனம் மாறியதாகத் தெரியவில்லை!

சாதாரண கோரிக்கைகள்; ஒரு தன்மானமுள்ள தமிழன் போராடிப் பெற வேண்டிய உரிமைகள்—இவைகளுக்காகத்தான் வாதாடினார், சங்கரலிங்கனார்.

அவைகளுக்குள்ளே முதலிடம் பெறுவது ஆந்திரம், கேரளம், கன்னடம் பிரிந்த எஞ்சிய சென்னை மாநிலத்துக்குத் தமிழ்நாடு எனப் பெயரிடச் சொல்லி ஆட்சியாளர்களைக் கேட்டுக் கொள்ளும் கோரிக்கையாகும்.

—இந்த உரிமையைப் பெறுவதற்காக உண்ணாவிரதம் இருந்தவர், ஊர் கெடுப்போர் பட்டியலிலே இடம்பெறும் உதவாக்கரை அல்லர்; உரிமைகளைப் பெறுவதற்கு அவர் தேர்ந்தெடுத்த கருவியும் சாமான்யமானதல்ல!

சங்கரலிங்கம்—உடல், பொருள், ஆவி அனைத்தையும் தந்துவிட்ட காங்கிரஸ்காரர்!

நாற்பதாண்டுகளாக காங்கிரஸ் இயக்கம் அவருடைய தொண்டினைப் பெறும் பாக்கியம் பெற்றிருந்தது.

பதவியிலே இருக்கும் தன் சகோதரர்களைக் கேட்டுக் கொண்டார்—உத்தமர் காந்தி உலகுக்குக் காட்டிய அறவழியில் உணவு தொடாமலிருந்து!

ஆனால் அனுதினமும், அனவரதமும் பதவி! பதவி!—என்றலையும் அவர்களோ செவிட்டுப்பறை கிழிந்த பிறவிச் செவிடர்களாய் மாறி பண்பட்ட தமிழ் மகனொருவனின் உயிரைக் குடித்து விட்டார்கள்!

சில நாட்களுக்கு முன்புதான் ஆட்லி குறிப்பிட்டார், ஆசியாவிலே நல்ல ஆட்சி நடைபெறும் நாடுகளில் இதுவும் ஒன்றென்று!

இதுவா நல்ல ஆட்சிக்கு அடையாளம்?

அணு அணுவாகச் செத்திருக்கிறான், ஒரு பிரஜை!

சுழல் விளக்குகள்போல் சுற்றிக் கொண்டிருந்த கண்கள் ஒளியிழந்து சுருங்க; பழுவெலும்புகள் யாவும் தெரிய பல நாட்கள் சித்திரவதைக்குள்ளாகி மறைந்திருக்கிறார்!

'நீர் குறிப்பிட்ட குறைகளைத் தீர்த்து வைக்க முயலுகிறோம்'—என ஒரு வார்த்தை-ஒரே ஒரு வார்த்தை சொல்லியிருந்தால் ஒரு தன்னலங்கருதாத் தியாகியின் உயிர் காப்பாற்றப்பட்டிருக்கும்; காங்கிரஸ் கட்சிக்கு ஏற்பட்ட களங்கம் கழுவப்பட்டிருக்கும்!

ஆனால் அதிகாரச் செருக்கும், ஆணவத் திமிரும் சேர்ந்து காமராசரது வாயை அடைத்துவிட்டது!

"ஒரு உயிர்தானே போய்விட்டது; பரவாயில்லை—ஒரு வோட்டு—அதுவும் எதிர்க் கட்சிக்கு விழுகிற ஒரு ஓட்டுத்தானே குறைந்தது"—என்று நினைத்துக் கொண்டு காமராசர் ஆட்சி மாபெரும் பழியொன்றைச் சம்பாதித்துக் கொண்டு விட்டது!

மனிதாபிமானத்தை மதிக்காத இந்த ஆட்சியா மக்களாட்சி?—என்று மான உணர்ச்சி கொண்டவர்கள் அனைவரும் காறி உமிழும் சதிக்கு ஆளாகி விட்டது, காளானைப்போல் கிள்ளி யெறியப்பட வேண்டிய காமராசரது பரிபாலனம்!

கொடிது! கொடிது! காங்கிரஸ் ஆட்சி கொடும் புலி வாழும் காட்டினும் கொடிது—என ஊரும் உலகமும் கூறுவதற்கு எடுத்துக்காட்டுபோல் அமைந்து விட்டது சங்கரலிங்கனார் சாவு!

அறிஞர் அண்ணா அவர்கள் குறிப்பிட்டதைப் போல, ஒரு கிராமத்தில் யாராவது ஒருவன் அன்ன ஆகாரம் இன்றி மரத்தடியில படுத்து இருந்தால்கூட மக்களனைவரும்கூடி அவன் குறைகளைக் கேட்பார்கள். இது சாதாரணமாக கிராமத்தில்கூட நடக்கக் கூடியது.

—இந்த சாதாரண மனித உணர்ச்சிகூட இல்லை, நாடாள வந்தவருக்கு! கொடுமை! கொடுமை!! கொலை பாதகம் செய்துவிட்டார் காமராசர்! குள்ளநரிக் குணம் படைத்த குல்லுகபட்டராம் ஆச்சாரியாரையும் மிஞ்சிவிட்டார் ஆமை வேகம் போடும் விருதுநகரத்து வீரர்!

ஒரு மொரார்ஜி தேசாயை உண்ணாவிரதம் இருக்கச் சொல்லி, இந்திய உபகண்டத்தின் கவனத்தைக் கவருவதற்கு ஏற்பாடு செய்தவர்கள், இன்று ஒரு ஏழை புழுப்போலத் துடித்துத் துடித்து மடிந்ததைப் பொருட்படுத்தாமலிருந்து விட்டார்கள்!

உயிர்த் தியாகி சங்கரலிங்கனார் சாகும்போது கூறிவிட்டுச் சென்றாராம், தான் மறைந்துவிட்டால் தன்னுடைய சவத்தை எதிர்க் கட்சிக்காரர்களிடம் கொடுக்கச் சொல்லி!

பாவம்; 40 ஆண்டுகளாக அவர் உழைத்த காங்கிரஸ் கட்சிக்கு தன்னுடைய பிணத்தைத் தொடுவதற்குக்கூட யோக்கியதை இல்லை என்று கூறிவிட்டார், சங்கரலிங்கனார்!

வெட்கம்! வெட்கம்! இந்த நிகழ்ச்சிக்குப் பிறகுகூட காமராசர் தலை நிமிர்ந்து நடப்பாரானால் அது அவரது தடித்த மனதைத்தான் குறிப்பதாக இருக்கும்! வாழ்க சங்கரலிங்கனார் தியாகம்! வீழ்க ஆளவந்தாரின் அலட்சியப் போக்கு!

# தென்னிலங்கைத் தீவு!

❊ ஒரு ஆராய்ச்சி ❊

**சின்னஞ்சிறிய அந்தத் தென்னிலங்கைத் தீவிற்குத் தான் எத்தனை பெயர்கள்? அவைகள் அனைத்தையும் ஆராயும் இலக்கியக் கட்டுரைதான் இது!**

இலங்கைக்குப் பல பெயர்கள் இருப்பதுபோல, உலகில் வேறு எந்தத் தீவுக்கும் இருக்குமென்று கூறமுடியாது.

இயக்க வேந்தனாகிய குபேரன் இலங்கையில் ஆட்சி புரிந்தான் என்று புராணம் கூறுவதால் இந்தத் தீவு இயக்கத் தீவு என்று பெயர் பெற்றது. இனி நாகர்கள் முன்னொரு காலத்தில் இலங்கையில் வாழ்ந்ததால் இதற்கு நாகத் தீவு என்றும் பெயர் வந்தது.

முன் காலத்தில் இலங்கை தமிழ் நாட்டின் பகுதியாய் இருந்ததென்றே சரித்திர ஆராய்ச்சியாளர் துணிகிறார்கள். இந்த நாட்டின் பழம் பெருங் குடிகள் திராவிட வகுப்பினர் என்பது அவர்கள் கருத்து. கந்த புராண காலத்தில் சூரபத்மன் ஆட்சி புரிந்த போது, கார்த்திகேயன் இந்த நாட்டுக்கு வந்த வரலாற்றைக் கதிர்காமம் என்னும் நகர் இன்றும் நினைவூட்டிக் கொண்டிருக்கிறது என்கிறார் ஸர் பொன். அருணாசலம். களுகங்கை கடலோடு கலக்கும் இடத்தின் ஒரு கரை வேலபுர மென்றும் மற்றொரு கரை தேவ சத்துரு கரை (தேசஸ்தர துறை) என்றும் வழங்குவது இந்தப் போரை நினைவூட்டுகிறதென்று இவர் குறிப்பிடுகிறார்.

ஒரு பெருங் கண்டத்தின் பெரும் பகுதியாயிருந்த இலங்கை பல முறை கடலில் முழுகியது என்று சரித்திர நூல்கள் தெளிவாகக் கூறுகின்றன. அப்படியானால் இலங்கையின் நிலப்பரப்பு இப்போதுள்ளதைவிட முன் காலத்தில் இன்னும் பல மடங்கு விரிந்திருக்க வேண்டும். ஆழி சூழ் இலங்கை ஆயிரக் கணக்கான மைல்களுக்குப் பரந்திருந்ததென்றார்கள். ராவணனுடைய ஆட்சியின் பின்பு ஒரு முறை கடல் கொண்டதாம். ராம ராவண யுத்தம் கி. மு. 2387ல் நிகழ்ந்ததென்று சிங்களச் சரித்திரம் குறிப்பிடுகிறது. ஸர் வில்லியம் ஜோன்ஸ் இந்த நிகழ்ச்சி கி. மு. 1810–ல் நிகழ்ந்தது என்று குறிப்பிட்டிருக்கிறார். பத்துவாசன் காலத்திலும் (கி. மு. 500) களனிதிஸ்ஸன் காலத்திலும் (கி. மு. 200) இந்தத் தீவுக்குக் கீழ், மேல் தென் பாகங்கள் கடலில் ஆழ்ந்தன என்று சிங்களச் சரித்திரம் கூறுகிறது. இன்னும் 'கடையம் பொத்த, லங்கா விஸ்தாரய என்னும் நூல்களால் களனி என்னும் ராஜதானி கடலிலிருந்து 28 மைல் தூரத்தில் இருந்ததென்று தெரிகிறது. 1,00,000 பட்டினங்களையும், 970 நெய்தற் பாக்களையும், 470 முத்துக் குளிப்பவர் கிராமங்களையும் சேர்த்து இலங்கை நாட்டின் 12ல் 11 பாகத்தைக் கடல் மூடியதென்று ராஜாவலி என்ற சிங்கள நூல் குறிப்பிடுகிறது.

இலங்கையின் கீழ், மேல், தென் பகுதிகளே கடல் வாய்ப்பட்டன என்பது மிகப் பொருத்தம். இலங்கையின் தென் கீழ்க் கடலில் கலங்கரை விளக்கம் கட்டியிருக்கும் கல்பாறையை இன்னும் ராவணக் கோட்டை என்றே கூறுகிறார்கள். ராவணன் திருக்கோணேசர் கோவிலைக் கட்டினான் என்பது கர்ண பரம்பரை. ராமன், ராவணனுடன் போர் தொடுப்பதற்கு முன்பு முனீசுவரத்தில் வணங்கினானென்று சர் அருணாசலம் குறிப்பிட்டிருக்கிறார். சேது பந்தனத்துக்கு 'ராமர் அணை' என்ற பெயர் இருப்பதையும் இங்கே கவனிக்க வேண்டும். சிதையின் பெயர் நுவரெலியாவுக்கும் ஹக்கலைக்கும் இடையிலுள்ள சீத்தலவா (சிதை வெளி) சிதாலை (சிதை அருவி) சிதா குண்ட (சிதை குண்டம்) என்ற இடப் பெயர்களாலும், பொய்ச் சிதை உருவத்தை இந்திரஜித்து எரித்த இடமென்று கருதப்பெறும் சிதாவக்கையென்ற இடப் பெயராலும், இலங்கையில் இன்றும் நின்று நிலவுகிறது. இன்றும் ராமாயணக் கதைகள் பலவிதமாக மலை நாட்டில் வழங்குகின்றன. இவற்றின் சிலவற்றை மேஜர் போர்ப்ஸ் என்ற சரித்திர அறிஞர் தொகுத்துக் கூறியிருக்கிறார்.

இலங்கை பெறும் பெயர் எந்தக் காரணம் பற்றி உண்டாயிற்றென்று துணிந்து கூற முடியவில்லை. இந்தச் சொல் இலட்சம் அல்லது இலக்கம் என்ற சொல்லின் மருவென்று கொண்டு, இதற்கருகில் இருந்த லட்சம் தீவுகள் கடல் வாய்ப்பட்டன என்ற கர்ண பரம்பரை வழக்கு ஒன்றை இது நினைவூட்டுகிறதென்றார் மேஜர் போர்ப்ஸ். இலக்கம் என்ற சொல் ஒளி யென்றும் பொருள் படுவது 'எல்லே யிலக்கம்' (தொல் உரி) என்ற நூற்பாவால் தெரிகிறது. ஒளியென்று ஒரு பொருள்படும் எல், இலக்கம் என்னும் இரண்டு சொற்களிலிருந்தும் முறையே ஈழம் என்பதும், இலங்கை, லங்கா என்பவையும் பிறந்திருக்கலாம்.

இலங்கை கடல் கால்வாயால் இரண்டு பெருங் கூறாகப் பிரிந்திருக்கிறது. முந்தியது வடபக்கம் உள்ளது. பிந்தியது தென்பக்கம் உள்ளது. ரத்தினத் தீபம் என்ற ஒரு பெயர் இலங்கைக்கு உண்டு. சமந்த கூடத்துக்கு அருகில் ரத்தின புரி என்ற சிறந்த நகரம் இருப்பதையும் இங்கே நினைவு கூறலாம். இலங்கை ரத்தினக் கல்லுக்குப் பெயர் போன இடம்.

ஈழம் என்ற பெயர் இலங்கை முழுவதற்கும் பொதுவாகவும் வடபால் கூறாகிய யாழ்பாணத்திற்குச் சிறப்பாகவும் வழங்குகிறது. பழஞ் சிங்களம் 'எலு' என்று வழங்கி வந்ததென்று சிங்களவரும் ஒப்புக் கொள்கிறார்கள். 'எலு' என்பது தமிழ்ச் சொல் என்று சொற்பிறப்பு ஆராய்ச்சி நிபுணர் சுவாமி ஞானப் பிரகாசர் குறிப்பிடுகிறார். இனி, சிறி ஈழம், சிஹளம், சிங்களம் என ஆயிற்றென்று கொள்வாரும் உண்டு.

தமிழர் வாழ்ந்த நாடு தமிழகம் என்றானது போல ஈழர் வாழ்ந்த நாடு ஈழம் என்று ஆகியிருக்க வேண்டும். சேரர், சோழர், பாண்டியர் என்ற தமிழரின் ஒவ்வோர் இனம் போல், ஈழரும் மற்றோர் இனமாக இருக்கலாம். இந்த ஈழர்களே இலங்கையில் நாகர்களுக்கும் சிங்களவர்களுக்கும் முன்பு இருந்த பழங்குடி மக்கள். ஈழர் என்ற சொல்லையே ஆரியர்கள் 'யக்ஷர்' என வழங்கினார்கள். ஆரியர்களுக்கு ழகர எழுத்தொலி இல்லாததால் அதை ஷகாரமாக்கி 'யக்ஷர்' என்று திரித்து வழங்கியிருக்கக் கூடும். ஈழர் தலைவன்தான் மிகப் புகழ் பெற்ற ராவணனும், குவேனியும் இந்த ஈழர் தலைவியே. ஈழர்கள் கல்வி, கைத்தொழில், வேளாண்மை முதலியவற்றில் சிறந்து வாழ்ந்தவர்களென்று பழைய நூல்களால் தெளிவாகிறது. ஈழக் குலச் சான்றோர் வரலாற்றால் ஈழரின் போர் பயிற்சியும் ஈழத்து பூதன்தேவனார் வரலாற்றால் ஈழரின் புலமையும் விளங்குகின்றன.

இனி ஈழம் என்பது பொன், கள், கிழங்கு என்று பல பொருள் தந்து நிற்பதால் இந்தப் பொருள்களைக் கருத்தில் வைத்துப் புராணிகர் பல கதைகளை உண்டாக்கிவிட்டார்கள். பொன் மலை எனப்படும் மேருவின் ஒரு சிகரமே ஈழ நாடாயிற்றென்பது பௌராணிகர் கூற்று. ஈழுவர் என்ற குடியினர் இந்தியாவில் காணப்படுவதால் அவர்கள் இந்தத் தீவிலிருந்து சென்று இந்தியாவில் குடியேறியவர்களாக இருக்கலாம். ஈழ நாட்டிலும் மலையாளத்திலும் குடியேறியவர் ஈழவர் எனவும் திருநெல்வேலியில் குடியேறிய ஈழத்துப் பிள்ளைமார் 'இல்லத்துப் பிள்ளைமார்' எனவும் வழங்குவதை இங்கே நினைவு கூறவேண்டும்.

இலங்கையின் வட பகுதியை வெற்றிகொண்ட ராஜராஜன் தன் நாட்டின் ஒரு பகுதியாக இதைக் கருதி இதற்கு மும்முடிச் சோழமண்டலம் என்று பெயரிட்டு அழைத்தான் என்பது தென்னிந்தியச் சாசனங்களால் புலனாகிறது.

சிங்களம் அல்லது சிங்களத் துவீபம் என்பதற்குச் சிங்களர் வாழும் இடம் என்று பொருள். சிங்களம் என்னும் தீவில் வாழ்ந்தவர்கள் சிங்களர் என்று பெயர் பெற்றார்கள் என்று வைபவமாலைக்காரர் கூறுகிறார். சிங்களர் என்னும் மரபினர் வாழ் இடம் சிங்களமாயிற்று என்பவரும் உண்டு. இடப் பெயர் ஆராய்ச்சி நிபுணர் திரு. எஸ். டபிள்யூ. குமாரசாமி, சிங்களம் என்ற சொல் சம்ஸ்கிருத மகாபாரதத்தில் வந்திருக்கிறதென்று குறிப்பிட்டிருக்கிறார். மேலும் இவர் சிங்களர் என்றசொல் கேரளர், போசளர், குந்தளர் என்பவை போல் ஆரியச் சொற் சிதைவாகிய இனப் பெயராயிருக்க வேண்டும் என்கிறார்.

சிங்களவர் பத்தினித் தெய்வம் என்ற கண்ணகியை இன்னும் வழிபட்டு வருகிறார்கள்.

இனி, தமிழ்மொழிந்த பதினேழு நிலங்களுள் முதலில் கூறப்பட்டிருப்பது சிங்களம். இதை நன்னூல் உரையாசிரியராகிய மயிலைநாதர் எடுத்துக் காட்டியிருக்கிறார்.

பழங்காலத்து யவன [உரோம, கிரேக்க] ஆசிரியர்கள் இந்தத் தீவு 'தாபிரபன' என்றபெயர் உடையது என்று அறிந்திருந்தார்கள். இது மிகவும் பழையதொரு பெயர். ராவணன் தீவு என்று இதற்குப் பொருள்படும் என்கிறார்கள் ஒரு சாரார். இது

❊ தொடர்ச்சி 10-ம் பக்கம்

# இருபது ஆண்டுகளுக்குப் பிறகு....

காவல் காத்துக் கொண்டிருந்த போலீஸ்காரன் கைப்பிரம்பை பின்னால் பிடித்தபடி மெதுவாக உலவிக் கொண்டிருந்தான். நேரம் இரவு பத்து மணிதான் இருக்கும். இருந்தாலும் பேய்க் காற்றும், பனியும் நடமாட்ட மிக்க அந்தச் சாலையை ஒரு பாலைவனமாக்கியிருந்தது.

தூரத்திலே ஆயிரம் மின்மினிப் பூச்சிகள் சேர்ந்து ஜொலிப்பதைப்போல விளம்பர விளக்குகள் கண் சிமிட்டிக் கொண்டிருந்தன.

அமைதி காப்பதற்காகவே அவதரித்திருந்த அந்தப் போலீஸ்காரன் ஒவ்வொரு கடையின் பூட்டையும் இழுத்துப் பார்த்தவாறே நகர்ந்து கொண்டிருந்தான்.

அப்போது ஒரு இரும்புக் கடையிலே சட்டைப் பையிலிருந்து ஒரு பெரிய சுருட்டை எடுத்து கையில் வைத்துக் கொண்டு, நாலா பக்கங்களிலும் தன் பார்வையை சுழலவிட்டுக் கொண்டிருந்தது, ஒரு உருவம்.

போலீஸ்காரனுக்கு அது போதுமே! சந்தேகம்; மிரட்டல்; உருட்டல்—இவை அத்தனையும் கலந்த பார்வையை நின்று கொண்டிருந்த உருவத்தின்மீது மோத விட்டான்!

சுருட்டைக் கையிலே வைத்துக் கொண்டிருந்த அவனே ஒரு புன்முறுவலைத் தவழ விட்டபடியே பேச ஆரம்பித்தான்!

"ஒன்றுமில்லை, அய்யா! என் நண்பன் ஒருவனுக்காகக் காத்துக் கொண்டிருக்கிறேன்.

"ஆமாம்; இருபது ஆண்டுகளுக்கு முன்பு நானும் அவனும் அதோ இடிந்து போயிருக்கும் அந்த 'ஓட்டலி'ல் சந்தித்தோம். இன்றைய தினம் மீண்டும் ஒன்று கூடுவதென்று தீர்மானித்தோம்....என்ன சிரிக்கிறீர்? நான் பழங்கதை பேசுவது பைத்தியக்காரத்தனமாக இருக்கிறதா? விவரமாகச் சொன்னால் அது உமக்குக் கூட ஒரு அரிய பொழுதுபோக்குச் சாதனமாக இருக்கும்!"

—இப்படி ஒரு பீடிகையைப் போட்டுக் கொண்டே அவன் கதையைச் சொல்ல ஆரம்பித்தான்:

"ஜிம்மி என்னுடைய உயிர்த் தோழன். நியூயார்க் நகரத்திலே நானும் அவனும் ஒரே குடும்பத்தில் பிறந்த சகோதரர்களைப் போல வளர்ந்தோம்; ஆனால் ஒரு நாளாவது நாங்கள் சண்டை போட்டுக் கொண்டதில்லை.

"கணவன் மனைவியரைப் போல வாழ்க்கையின் சுக துக்கங்களைப் பகிர்ந்து கொண்டோம்; ஆனால் ஒரு சமயமாவது மனமாச்சரியம் எங்கள் பிரிக்கும் கோடரியாக நுழைந்ததில்லை.

"இருபதாண்டுகளுக்கு முன்பு ஒரு நாள்—அப்போது எனக்கு வயது பதினெட்டு; ஜிம்மிக்கு இருபது. அதோ அந்த இடத்தில் முன்பு பிரபலமாயிருந்த 'பிராடீஸ் ரெஸ்டாரெண்டில்' கடைசி முறையாகச் சந்தித்தோம்.

"பாலபருவத்திலிருந்து இரட்டைக் குழந்தையாக வளர்ந்த நாங்கள் அன்றுதான் மூலைக்கு ஒருவராகப் பிரிந்து ஓடவேண்டிய சந்தர்ப்பம் வந்தது.

"ஒற்றுமைக்கு உதாரணமாய்த் திகழ்ந்த நீங்கள் விலகித் திரவேண்டிய அவசியம் என்ன வந்தது—என்று கேட்கிறாயா? எல்லாம் வாழ்க்கைப் போராட்டம், அய்யா; வாழ்க்கைப் போராட்டம்!"

"வயிறு வளர்க்க இருவருக்கும் ஒரே இடத்தில் வேலை கிடைக்குமா — என்று தேடினோம். நாங்கள் ஏறி இறங்காத தொழிற்சாலைப் படிகள் இல்லை; எங்கள் விண்ணப்பத்தாளைப் படித்துப் பாராத முதலாளிகள் கிடையாது! தொழில் இல்லாமல் இவ்வளவு பெரிய நகரத்தில் எப்படி அய்யா வாழ முடியும்?

"அதனால்தான் பிரிந்தோம். நான் மேற்கே சென்று என்னுடைய திறமையைக் காட்ட ஒரு வாய்ப்பு தேடிப் புறப்பட்டேன். ஆனால் ஜிம்மியோ நியூயார்க்கிலேயே எங்காவது ஒரு மூலையில் வேலை தேடுவதாகச் சொல்லிக் கிளம்பினன்.

"அன்று இறுதி முறையாக நாங்கள் சேர்ந்து சாப்பிடும் போது உறுதி எடுத்துக்கொண்டோம்.

"இன்றிலிருந்து இருபதாண்டுகள் கழித்து ஓர் இரவு பத்து மணிக்கு யார் எங்கிருந்தாலும் — இருவரில் யாராவது வாழ்க்கையில் உயர்ந்திருந்தாலும் சரி; தாழ்ந்திருந்தாலும் சரி; இந்த இடத்தில் சந்திப்பதென முடிவு செய்தோம்.

"அதனால்தான் அய்யா நான் இங்கே காத்திருக்கிறேன்."

—அவன் கூறி முடித்தான்! அவன் முகத்திலே நண்பனைக் காணப் போகிறோம் என்பதன் மகிழ்ச்சி ரேகைகள் தாண்டவமாடின!

"மிகவும் சுவையாக இருக்கிறதே உங்கள் கதை! ஆமாம்; இந்த இருபதாண்டுகளில் உங்களுக்குள் கடிதத் தொடர்புகள் எதுவுமில்லையா?"—போலீஸ்காரன் கேட்டான்!

"அதையேன் கேட்கிறீர்கள்! முதல் இரண்டு ஆண்டுகள் வரை நாங்கள் கடிதம் மூலம் சந்தித்து உறவாடிக் கொண்டிருந்தோம். அதற்குப் பின்னரும் ஜிம்மி எழுதிக் கொண்டுதான் இருந்தான். ஆனால் எனக்கோ அவன் கடிதங்களுக்குப் பதில் போடும் அளவுக்கு பொருளாதார வசதி இடந்தரவில்லை. என் மௌனத்தைப் பார்த்த ஜிம்மியும் பிறகு கடிதம் போடுவதையே நிறுத்திக் கொண்டான்.

"ஆனால் எனக்கு நிச்சயம் நம்பிக்கையிருக்கிறது; ஜிம்மி மட்டும் உயிரோடிருந்தால் கட்டாயம் அவன் என்னைப் பார்ப்பதற்கு ஓடோடியும் வருவான். ஏனெனில் என்னைப் போல் அன்பு கொண்ட நண்பனை அவன் வேறெங்குமே சந்திக்க முடியாது...ஆமாம்; இப்போது மணி எ...

—போலீஸ்காரன் ஒரு கடிகாரத்தைச் சட்டைப் பையிலிருந்து எடுத்தான். அந்த இருட்டிலே மணி தெரியவில்லை. பிறகு ஒரு நெருப்புக் குச்சியைக் கிழித்துப் பார்த்த பின் "பத்து மணிக்கு இன்னும் பத்து நிமிஷங்கள் இருக்கின்றன," என்று கூறினன்.

இதைக் கேட்ட அந்த மனிதனுக்கு ஆனந்தம் தாங்க முடியவில்லை.

"ஆகா! இன்னும் பத்து நிமிஷங்கள் இருக்கின்றனவே என் ஆருயிர்த் தோழனைப் பார்ப்பதற்கு! அய்யா, போலீஸ்காரரே! நான் ஆயிரம் மைல்கள் தாண்டி வந்திருக்கிறேன் அவனைக் காண்பதற்காக. நிச்சயம் அவன் வந்து விடுவானா?"

"சரி அய்யா! நான் இங்கிருந்தால் நீர் இன்னும் ஏதாவது கேட்டுக் கொண்டே இருப்பீர். நான் வருகிறேன்!"

—போலீஸ்காரன் நகர்ந்தான், உண்மை நட்பென்றால் இப்படியல்லவா இருக்கவேண்டும், என்று எண்ணியபடி!

ஆயிரம் மைல்கள் தாண்டி அருமை நண்பனைக் காணவந்த அவன் அசையாத சிலைபோல அங்கேயே நின்று கொண்டிருந்தான்.

நேரம் போய்க் கொண்டே இருந்தது. அவனைச் சந்தேகம் ஆட்கொள்ள ஆரம்பித்தது.

'ஒருவேளை ஜிம்மி செத்திருப்பானே? இல்லையேல் என்னைப் போல் அல்லாது அவன் பெரிய பணக்காரனாக மாறி, அந்த உல்லாசத்தில் பழைய நண்பனை மறந்திருப்பானே?' – எண்ணங்கள் இப்படி யெல்லாம் சிறகு கட்டிப் பறந்தன!

அவன் சுருட்டை எடுத்து வாயில் வைத்துக் கொளுத்தினன்.

அப்போதுதான் தூரத்தில் வந்துகொண்டிருந்த உருவம் ஒன்று திரும்பிச் சென்றது.

அவன் லேசாகச் சிரித்துக் கொண்டான். 'பாவம்; பேர் வழிக்கு ஞாபக மறதி அதிகம் போலிருக்கிறது! எதையாவது வீட்டில் வைத்துவிட்டு மறந்து வந்துவிட்டார் போலிருக்கிறது!' — உதட்டுக் குள்ளாகவே முணுகிக் கொண்டான், அவன்!

காலம் ஓடியது. ஆர்வம் தேங்கி யிருந்த அவன் முகத்தில் படிப்படியாக சோகம் குடி கொள்ளத் துவங்கியது.

அந்த நேரம் ஒருவன் இரு

✲ தொடர்ச்சி 8-ம் பக்கம்

## அவர்களது உறவு!

### வர வர அவர்...

"ராஜாஜியின் அபிப்பிராயங்கள் எப்போதுமே 'ஒரிஜினலாக' இருக்கும். ஆனால், அவர் வர வர திராவிடக் கழகத் தலைவர் ஈ. வே. ரா. நிலைக்கு இறங்க ஆரம்பித்து விட்டார்."

—கோவையில்
காமராஜ்.

### ஆட்டி வைப்பேன்!

"வருகிற பொதுத் தேர்தலில் காமராஜர் வெற்றி பெற்றுவிட்டால் அரசியலில் நமக்குத் தொந்திரவே இருக்காது. மறுபடியும் காமராஜர் ஆட்சிக்கு வரப்போகிறார், அப்போது பாருங்களேன், காமராஜரை எப்படி ஆட்டி வைக்கிறேன் என்று."

—நாகப்பட்டினத்தில்
பெரியார்.

நாடகம்

காட்சி: 6

[சமயோஜிதம் பிள்ளை வீடு. ஆனைமுஞ்சிப் பிள்ளையும், அவரும் சாப்பாட்டு மேசையில் அமர்ந்திருக்கிறார்கள். கண்ணம்மா அவர்களுக்கு உணவு பரிமாறுகிறாள். சாப்பிட்டவாறே ஆனைமுஞ்சிப் பிள்ளை கண்ணம்மாவின் அழகை ரசிக்கிறார்...]

ஆனைமுஞ்சி: வெகு பிரமாதமாயிருக்கே சமையல்!...நளபாகம்கூட தோற்றுவிடும். என்ன ருசி! என்ன ருசி!...

சமயோ: எல்லாம் கண்ணம்மாவோட கை வண்ணந்தான்!

ஆனை: அப்படியா?... வெகு பேஷ்!

கண்: இல்லப்பா...இன்னைக்கி வேலைக்காரிதான் சமையல் செய்தாள்!

(சமயோஜிதம் பிள்ளையின் முகம் மாறுகிறது.)

ஆனை: வேலைக்காரியின் சமையலே இப்படி இருந்தால்... எஜமானியின் சமையல் எப்படியிருக்குமோ?...

சம: சொல்லவே வேண்டியதில்லை...அவ்வளவு சுவையாயிருக்கும்!

கண்: அய்யோ......எனக்கு சமைக்கவே தெரியாது!...

சம: (முக மாற்றத்துடன்) பொய்! பொய்!...என் பெண்ணுகிட்டே எப்போதுமே தற்பெருமை கிடையாதுங்க!...

ஆனை: அப்படித்தான் இருக்கணும்!...

கண்: ஆமாம்......தற்பெருமையே எனக்குப் பிடிக்காது!......பிறர் பார்த்து என்னைப் பாராட்ட வேண்டுமே தவிர, நானே என்னைப் பாராட்டிக் கொள்ளமாட்டேன். என்னைப் போல இப்படியொரு நல்ல கொள்கையுள்ள பெண்மணியை நாடு முழுவதிலும் தேடினாலும் கிடைக்கமாட்டாள்!...... நான் ஒருத்திதான் தற்பெருமை பேசாத தையல்! எனக்கு இருக்கிற அழகுக்கும் படிப்புக்கும் இந்நேரம் வேறொருத்தியாயிருந்தால்......அடடா.... தலைகீழே யல்லவா நிற்பாள்!...

ஆனை: சந்தேகமென்ன—சந்தேகமென்ன.....பிள்ளைவாள்! கண்ணம்மா நன்றாகப் பேசுகிறாளே...

சம: ஆமாம்...அவள் படிக்கும்போதே ஸ்கூல்ல மேடைப் பேச்சிலே யெல்லாம் முதல் பரிசு வாங்கினவளாச்சே!...

கண்: ஆமாம்...எங்கப்பாவுக்குத் தெரிஞ்சவர்தான் அந்த விழாவுக்கு நீதிபதி!......அதனாலே முதல் பரிசை எனக்குக் கொடுத்தார்!...

சம: பாத்தீங்களா...பாத்தீங்களா...அவளுடைய பெருமையைப் பற்றி அவளுக்கு நேராச் சொன்னால் கோபம் வருவதை!...

கண்: கோபமில்லையப்பா!... உண்மையைத்தானே சொல்றேன்!...

ஆனை: கண்ணம்மாவுக்கு பாடத் தெரியும்னு நினைக்கிறேன்...

கண்: ஓ...பாடுவேன்...முதல்ல நீங்க கையைக் கழுவுங்க!... அப்பறம் பாடுறேன்.

(இருவரும் கை கழுவிக் கொண்டு உட்காருகிறார்கள்.)

சம: கண்ணம்மாவுக்கு நடனம்கூட ஆடத் தெரியும் .........பாரதியார் பாட்டு ஒண்ணு பாடி நாட்டியம் ஆடும்மா!...

[கண்ணம்மா.....பாடியபடி நடனமாடுகிறாள்...]

"பொலிவிலா முகத்தினைய்
போ போ போ!
பொறியிழந்த விழியினைய்
போ போ போ!
ஒலியிழந்த குரலினைய்
போ போ போ!
ஒளியிழந்த மேனியாய்
போ போ போ!..."

[என்ற பாட்டுக்கு நடனமாடி ஆனைமுஞ்சிப் பிள்ளையை மறைமுகமாகக் கிண்டல் செய்கிறாள். நடனம் முடிந்ததும் அசட்டுச் சிரிப்புடன்,]

ஆனை: பாரதியார் பாட்டு இன்னொரு அருமையான பாட்டு உண்டே!......... "ஒளி படைத்த கண்ணினாய் வா! வா! வா!" —அதைப் பாடலாமே!...

கண்: பாடலாம்.........ஆனால் அது இந்த இடத்துக்கு அவ்வளவு பொருத்தமாயிருக்காது!...

ஆனை: போ போ போ என்று; வெள்ளைக்காரனைப் பார்த்து பாரதியார் பாடினார்......அதை இப்போது பாடுவது எப்படிப் பொருத்தம்?...

கண்: பொலிவிலா முகமும்—பொறியிழந்த விழியும்—ஒலியிழந்த குரலும்—ஒளியிழந்த மேனியும் வெள்ளைக்கார வெறியர்களுக்கு மட்டும் உரித்தான வர்ணனைகள் அல்ல; உங்களைப் போன்ற மனிதர்கள் அனைவருக்கும் பொருத்தமான வர்ணனைகள்தான்!...

ஆனை: ஆ!...என்ன சொன்னே .........

சம: ஏ, கண்ணம்மா!......... என்ன இது; அவ்வளவு பெரிய மனுஷரிடம் போய் போக்கிரித்தனமாகப் பேசிக் கொண்டு?...

கண்: சரிதான் பேசாமலிருங்களப்பா!... ...யார் இவர்?... ஆனைமுஞ்சிப் பிள்ளைக்கு ஆஸ்தி பாஸ்தி ஐஸ்வர்யம் எல்லாம் கடலைப் போல இருக்கலாம்!...ஆனால்... இங்கே இவர் என்னை விலை பேசி வாங்க வந்த வியாபாரி!......தாங்களோ தந்தை நிலைமையிலிருந்து மாறி தரகர் நிலைக்கு இறங்கி விட்டீர்கள்!... எலக்ஷன் செலவுக்கு வீடு, வாசல், நிலபுலன்களை விற்பவர்களைப் பார்த்திருக்கிறேன் ... இப்படி மகளை விற்கும் கொடுமையை இன்றைக்குத்தான் பார்க்கிறேன்...

சம: வாயை மூடு!

ஆனை: சமயோஜிதம் பிள்ளைவாள்!...நல்லாயிருக்கய்யா உங்க நாகரீகம்!......வீட்டுக்கு அழைத்து வந்து என்னை அவமானப் படுத்துகிற அளவுக்கு உமக்கு அவ்வளவு கொழுப்பா?...

சம: மன்னிக்கவும்...கண்ணம்மாவுக்கு இன்னைக்கு என்னமோ புத்தி சரியா இல்லை.....ஏதோ உளறிட்டா...நீங்க போயிட்டு வாங்க...அப்புறம் நான் வீட்டுக்கு வர்றேன்......

ஆனை: (உறுமிக் கொண்டே) கண்ணம்மா! நான் வர்றேன்!...

[கண்ணம்மா ஆடிக் கொண்டே பாடுகிறாள்.]

"கிலி பிடித்த நெஞ்சினாய்
போ போ போ!
கீழ்மை யென்றும் வேண்டுவாய்
போ போ போ!"

ஆனை: சரிதான்; கொஞ்சம் பைத்தியந்தான் போலிருக்கு!...

சம: ஆமாங்க...அதான் நான் சொன்னேனே; திடீர்னு இப்படி ஆகியிருக்கு!...... ரெண்டு நாளில் குணப்படுத்தி விடுகிறேன்...நீங்கள் வருத்தப் படாமப் போங்க!...

(ஆனைமுஞ்சி போகிறார்.)

சம: கண்ணம்மா!.....என்ன உனக்குக் கேடு வந்தது?...

கண்: கேடு, தானாக வரவில்லையப்பா!......நீங்களல்லவா அழைத்துக்கொண்டு வருகிறீர்கள்?...

சம: லட்சாதிபதி நம்ப வீட்டுக்கு மாப்பிள்ளையாகிறது கேடா?...அவரைப்

தயாராகிறது!
வெள்ளிக்கிழமை
'முரசொலி'யில் தொடர்கதையாக நீங்கள்
படித்து மகிழ்ந்த உணர்ச்சிச் சித்திரம்—
புத்தக வடிவில்!
விபரங்கட்கு
முரசொலி பதிப்பகம், சென்னை-6.

# திடுக்கிடும் செய்தி!

## தில்லை வில்லாளன் தரும் தீந்தமிழ் தொடர் நாடகம்...

❊ அடுத்த இதழ் முதல் உங்கள் சிந்தை, அணு ஒவ்வொன்றையும் மகிழ்விக்க "முரசொலி" ஏட்டில் துவங்குகிறது!

❊ இது ஒரு காதற் காவியம்—கற்கண்டு நிகர் சொல்லோவியம்—என நீங்கள் எல்லோரும் போற்றிடும் நல்லதொரு நாடகம்! சுவைத்திட அடுத்த இதழினை எதிர்பாருங்கள்!

---

போல அருமையான மாப்பிள்ளை உனக்கு வேறு யாரு கிடைப்பார்கள்?...

**கண்:** நானென்ன உங்களிடம் எனக்கு மாப்பிள்ளை தேடுங்கள் என்று சொல்லி அழுது கொண்டா இருக்கிறேன்?...ஏன் நீங்களே வலுவில் வந்து எனக்குத் தொல்லை கொடுக்கிறீர்கள்?

**சம:** இந்த வருஷம் இல்லாவிட்டாலும் அடுத்த வருஷம் கல்யாணம் ஆகித்தானே தீர வேண்டும் உனக்கு!...இந்த வருஷமே ...எதிர்பார்க்காத இடத்திலேயிருந்து பெண் கேட்கிறார்கள் என்றால் அது உன் அதிர்ஷ்டந்தானே கண்ணம்மா!...

**கண்:** அதிர்ஷ்டம் என்றால் அர்த்தம் என்னப்பா?... ஆனைத் தலையும்—பானை வயிறும்—பூனைக் கண்ணும் படைத்த அந்தக் கணவனோடு காலமெல்லாம் கண்ணீர் வடித்தவாறு நான் வாழ்வதற்குப் பெயர்தான் அதிர்ஷ்டமா?......உங்களுக்கு அதிர்ஷ்டத்துக்கும் அர்த்தம் தெரியவில்லை! அழகுக்கும் பொருள் தெரியவில்லை!...

**சம:** அழகு! அழகு! அழகு! எழுவெடுத்த அழகு! ஐம்பதாயிரம் தருகிறேன் என்கிறானே; அதைவிட அழகு மதிப்பா?...

**கண்:** ஐம்பதாயிரத்துக்கு மானத்தை விற்க வேண்டுமா?...

**சம:** மானம் போகாமலிருப்பதற்குத்தான் அவனிடம் ஐம்பதாயிரம் வாங்கப் பார்க்கிறேன்........எல்லா வருஷமும் எலக்ஷனில் நின்றுவிட்டு இந்த வருஷம் நிற்காவிட்டால் என் மானம் போய்விடாதா?...

**கண்:** பணமில்லாமல் ஜெயிக்கலாம் என்றுதானே காங்கிரசில் திடீரென்று சேர்ந்தீர்கள்! பிறகேன் பணம்?...

**சம:** நான் காங்கிரசில் சேர்ந்தேன்; மண்ணாங்கட்டி!... நான் சேரும்போதெல்லாம் அந்தத் தி. மு. க. பசங்கள் தேர்தலில் நிற்கிறதா தீர்மானம் போடலே!......... இப்ப தீர்மானம் போட்டுட்டாங்க!......அவனுங்களை எதிர்த்து நிக்கிறதுன்னா சாமான்யமா?... ஓட்டர்களுக்கு பணத்தை வாரி இறைச்சுதானே ஜெயிக்க முடியும்!...

**கண்:** என்னப்பா இதைச் சொல்ல உங்களுக்கே வெட்கமா இல்லே!...காங்கிரஸ் கட்சிக்கு எவ்வளவு மதிப்பு இருக்குது நாட்டிலே!.........தலைவர் நேரு வெளி நாட்டுப் புகழ் பெற்ற வீரர்!.............. நம்ப தமிழ் நாட்டுக் காமராஜரோ பெரிய பச்சைத் தமிழர்! அப்படிப் பட்ட கட்சி பணங் கொடுத்து ஓட்டு வாங்குவதாவது?...

**சம:** ஆமாம்; பணங்கொடுத்துத்தான் ஓட்டு வாங்கணும்!... அதுக்காகத்தான் காங்கிரசிலே பணக்காரர்களுக்கே தேர்தல் டிக்கெட் கொடுக்கப்படுகிறது'...

**கண்:** அப்ப—காங்கிரசிலே இருக்கிற ஏழைகள் தேர்தலில் நிற்கவே முடியாதா?...

**சம:** காங்கிரசுக்காகப் பாடுபட்டவர்களுக்கு, கஷ்டப்பட்டவர்களுக்கெல்லாம் இப்ப ஒரு மதிப்பும் கிடையாது!....எங்களைப் போல இருக்கிற பெரிய மனுஷர்கள்தான் காங்கிரசிலே தூண்கள்!...

**கண்:** உங்களை எப்படியப்பா பணக்காரர் பட்டியலில் சேர்த்தார்கள்?...எலக்ஷனுக்கே செலவுக்குப் பணமில்லை உங்களிடம்!...

**சம:** எல்லாம் வெளி வேஷத்தைக் கண்டுதான் மயங்கியிருக்கிறார்கள். அவர்களுக்கு என்ன தெரியும்... இங்கே சொத்தெல்லாம் கடனில் மூழ்கியிருக்கிற சங்கதி! அதனால்தான் சொல்லுகிறேன், நீ ஆனை மூஞ்சிப் பிள்ளையைக் கல்யாணம் செய்து கொள் என்று!

**கண்:** மறுபடியும் அதை ஆரம்பிக்காதீர்கள் அப்பா!... நான் ஒரு யோசனை சொல்லுகிறேன்; அதன்படி செய்யுங்கள்!...

**சம:** என்ன யோசனை? எனக்குத் தெரியாத யோசனை!...

**கண்:** "எனக்குப் பதவி ஆசை இல்லை!...எந்தப் பதவியிலும் இல்லாமல் மக்களுக்குப் பாடுபடப் போகிறேன்" என்று ஒரு அறிக்கை விட்டு விடுங்கள்! ஊரெல்லாம் உங்களைப் புகழ்வார்கள்!...

**சம:** உண்மைதான்! ஆனால் என் உடம்போடு ஊறிக் கிடக்கும் பதவி ஆசைக்குத் தடை போடச் சொல்லுகிறாயே; அது என்னால் முடியுமா?... முடியாது! முடியாது!..... என்னுடைய வாழ்வு உன் கையில்தான் இருக்கிறது. இந்த வருஷம் எலக்ஷனுக்கு நிற்காவிட்டால் நான் பிணத்துக்குச் சமானம்!...

**கண்:** சரி; நின்று தோற்று விட்டால்......?

**சம:** எப்படியோ எனக்கு ஒரு மந்திரிப் பதவிக்கு 'சான்ஸ்' உண்டு!........ பக்தவத்சலம் இருக்கிறாரே; அவரென்ன ஜெயித்த பிறகா மந்திரியானார்! தோற்றார்—மந்திரியானார்!...அவரைத் தோற்கடிக்கக் காரணமாயிருந்தவர்கள் இப்போது காங்கிரசில் சேர்ந்து விட்டார்கள்!

**கண்:** சேரவில்லையப்பா!..... காங்கிரசால் இழுக்கப் பட்டிருக்கிறார்கள்!....... அதுபோன்றவர்களின் தயவில்லாமல் காங்கிரஸ் வாழ முடியாது என்பது என்னமோ நிச்சயமாகி விட்டது!...

**சம:** என்னம்மா நீ; மறுபடியும் மறுபடியும் அரசியலையே சுற்றிச் சுற்றிப் பேசுகிறாய்!...நான் கேட்பதற்குப் பதில் சொல்!...

**கண்:** சொல்வதென்ன? அதுதான் செயல்மூலம் காட்டி அந்தச் சீமானை வழி அனுப்பி வைத்தேனே...

**சம:** இனி உன்னிடம் சிரித்தோ.........சமாதானமோ பேசிப் பயனில்லை!...

**கண்:** பலாத்காரக் கல்யாணம் பண்ணி வைக்க ஏற்பாடு செய்யுங்கள்!...

**சம:** கண்ணம்மா!.....நான் சொல்வதைக் கேள்!... உன் எண்ணத்தை மாற்றிக் கொள்!...

**கண்:** நானென்ன; உங்களைப் போன்ற பச்சோந்தி அரசியல் பண்பு படைத்தவளா?...அடிக்கடி எண்ணத்தை மாற்றிக்கொள்ள முடியாதப்பா; முடியாது!...என்னைப் பற்றி முடிவு செய்து கொள்ள எனக்கே தெரியும். நீங்கள் தலையிடாதீர்கள்!...

[சமயோஜிதம் கண்களில் தீ கிளம்புகிறது. ஆத்திரத்தால் துடிக்கிறார்......அப்போது பலவேஷம் உள்ளே வந்து.]

**பலவே:** முதலாளி!.....சங்கரலிங்கம் வந்திருக்காரு!...

**சம:** யாரு?...சங்கரலிங்கமா? ...சங்கரலிங்க நாடாரா? ...அய்யோ......காங்கிரஸ்காரர்களைப் பழிவாங்க அவர்...பேய் உருவத்திலே வந்துட்டாரா?........அய்யய்யோ!...

**பல:** இல்லிங்க......நம்ப ஆனை மூச்சிப் பிள்ளையோட மானேஜர் சங்கரலிங்கம் வந்திருக்காரு; ஏதோ கடுதாசு கொண்டுகிட்டு!...

**சம:** எப்பாடா!...(பெருமூச்சு) இதோ வந்துட்டேன்!...

(போகிறார், பலவேஷத்துடன்......கண்ணம்மா பாடுகிறாள்...

"கிலிபிடித்த நெஞ்சினாய்
போ போ போ!"

என்று)

[திரை விழுகிறது]

(தொடரும்)

---

# "வெள்ளி வீதி"

## முக்கிய அறிவிப்பு!

வெள்ளிவீதிக்கான தனி அச்சகம் நிறுவும் முயற்சியில் ஈடுபட்டு, அந்த முயற்சி இரண்டொரு வாரங்களில் நிறைவேற இருக்கிறது. அதற்கான தீவிர ஏற்பாடுகளைக் கவனிக்க வேண்டியிருப்பதால் "வெள்ளி வீதி" அடுத்த இதழ்—நவம்பர் 10-ம் நாள்தான் வெளி வரும். அந்த இதழில மு. கருணாநிதி எழுதும் "என்னைப் பற்றி!" என்ற தொடரோவியம் ஆரம்பமாகிறது! அதற்கான விளம்பரச் சுவரொட்டிகள் தயாராகி வருகின்றன. ஏஜண்டுகள் கூடுதல் பிரதிகட்கு முன்னதாக அறிவிக்க வேண்டுகிறோம். மேலும் பட்டியல் பாக்கி தரவேண்டியவர்கள் உடனடியாக அனுப்பிவிட வேண்டுகிறோம்.

நிர்வாகி, 'வெள்ளி வீதி' :: சென்னை-6.

## இருபது...

5-ம் பக்கத் தொடர்ச்சி

கைகளையும் நீட்டியவாறு ஓடி வந்தான்.

“பாப்! நீயா?”

“ஜிம்மி! வந்து விட்டாயா?”

இருவரும் தழுவிக் கொண்டனர்.

“ஜிம்மி! ஏனப்பா, இவ்வளவு தாமதமாக வந்தாய்? அதற்குள் இந்தச் சண்டாள இருதயம் என்னவெல்லாம் நினைத்து விட்டது தெரியுமா?”

—ஆனந்த லாகிரியில் அவன் என்னென்னவோ பேசினான்.

“விதிதான் மாறாத தன்மை கொண்டது என்பார்கள். அது பொய்; நம்முடைய நட்புதான் மாறாதது. இல்லையா, ஜிம்மி!... அடடே...நீ என்ன இவ்வளவு வளர்ந்து விட்டாய்?...சரி; சரி ... வா ... நம் முகத்தைத் தெளிவாக அந்த விளக்கு வெளிச்சத்தில் பார்த்துக் கொள்வோம்!”

—இருவரும் நகர்ந்தனர்.

இரவில் நிலவில்லாத குறையைத் தீர்த்துக் கொண்டிருந்த விளக்குக் கம்பத்தின் அருகில் சென்றதும், பாப் ஜிம்மியின் முகத்தை உற்று நோக்கினான். உடனே அவனையறியாமலேயே அவன் கூக்குரல் போட ஆரம்பித்தான்.

“ஊஹூம்: நீ என்னுடைய ஜிம்மியல்ல; என் ஜிம்மி இப்படியிருக்க மாட்டான். நீ வேறு யாரோ ஒரு ஏமாற்றுக்காரன். உண்மையைச் சொல்லிவிடு...என் சேதி தெரியுமா உனக்கு?”

—பாப் ஆவேசம் வந்தவனைப் போல பேசினான்!

ஆனால் வந்தவனோ சிறிதும் அதிர்ச்சியடையாமல், “தெரியுமப்பா உன் சேதி! நீ ஒரு பெரிய பக்காத் திருடன் என்பது எனக்கா தெரியாது?... அசையாதே; நீ கைது செய்யப்பட்டிருக்கிறாய்!”

—அவன் பேசாமல் பாப் கையிலே விலங்கை மாட்டினான்.

“என்னை உன் உயிர்த் தோழன் என்று நினைத்துக் கொண்ட பரிதாபத்திற்குரியவனே! உனக்கு என் ஆழ்ந்த அனுதாபம்...உனக்கு ஒரு கடிதம் கொண்டு வந்திருக்கிறேன். அது என்னுடைய அதிகாரி எழுதிக் கொடுத்தது...” என்றவாறே அவன் ஒரு கடிதத்தைக் கொடுத்தான்.

நடுங்கிய விரல்கள் நர்த்தனமாட பாப் அந்தக் கடிதத்தைப் பிரித்தான்.

“அன்புள்ள பாப்! இப்படி ஒரு காட்சி கனவிலும் நடக்குமென்று நான் நினைத்ததேயில்லை.

---

# அடுத்த தொடர் கதை

# சுருளி மலை

அழகு தமிழில்...அற்புதக் கதை அமைப்போடு

## கருணாநிதி தரும்

## காதற் காவியம்

## விரைவில்!...

அடுத்த இதழில் ஆரம்பமாகிற நாள் குறிக்கப்படும்!

---

நாம் இருவரும் இருபது ஆண்டுகளுக்கு முன்பு பிரியும் போது எவ்வளவு பெரிய ஆசைக் கோட்டைகளையெல்லாம் கட்டினோம்? சாவைத் தவிர வேறு எதுவும் நம் நட்பைப் பிரிக்க முடியாதென்று நீ கூறினாய்.

இரு துருவங்களில் நாம் இருந்தாலும் இருபதாண்டுகளுக்குப் பிறகு நாம் இணைந்து விடுவோம்—என்று நான் கூறினேன்.

ஆனால் நாம் இப்போது இணைய முடியாத நிலைமை ஏற்பட்டுவிட்டது, நண்பா!

விளக்கமாகவே சொல்கிறேன், கேள்!

இன்று சரியாக பத்து மணிக்கு உன்னைச் சந்திக்க வந்தேன். நல்ல இருட்டாக இருந்தபடியால் உன் உருவம் நன்றாகத் தெரியவில்லை. அப்போதுதான் நீ சுருட்டு பற்ற வைப்பதற்காக நெருப்புக் குச்சியைக் கொளுத்தினாய்; அப்போதுதான் நண்பா, நானும் உன் முகத்தைத் தெளிவாகப் பார்த்தேன்!

அய்யோ; அந்தக் கொடுமையை என்ன சொல்வேன்! நான் பார்த்த உன் முகம், சிறு வயதில் ஒன்றாக ஓடி விளையாடி ஒரே தட்டில் சாப்பிட்டு, ஒரே படுக்கையில் படுத்துப் புரண்ட என் தோழனுடைய முகமல்ல; அது ஒரு திருடனுடைய முகம்! அந்த முகம் கொண்ட உருவத்தைத்தான் நீண்ட நாட்களாக அரசாங்கம் தேடி வருகிறது.

—இதைக் கண்டபிறகும் என்னால் உன்னிடம் நெருங்கி வர முடியவில்லை. எனவேதான் திரும்பி விட்டேன்.

‘ஏனடா திரும்பி விட்டாய்? இரக்கமற்றவனே! இருதயமில்லாதவனே! நட்புக்கு இலக்கணம் தெரியாத நயவஞ்சகனே!’ என்றெல்லாம் சொல்லத் தோன்றுகிறதா, உனக்கு?

என்ன செய்வது நண்பனே! இருபதாண்டு வறுமையின் கொடுமை உன்னை ஒரு திருடனாக்கி விட்டது.

இருபதாண்டு கடின உழைப்பும், ஊக்கமும் என்னை ஒரு போலீஸ் இன்ஸ்பெக்டராக மாற்றியிருக்கிறது.

—இந்த நிலைமையில் நான் உன்னை எப்படி அன்பா சந்திக்க முடியும்? அதனால்தான் நான் திரும்பி வந்து சாதாரண உடுப்பில் இருந்த ஒரு போலீஸ்காரனை அனுப்பி உன்னைக் கைது செய்ய ஏற்பாடு செய்தேன்.

தயவு செய்து என்னை மன்னித்து விடு, நண்பா! என் கடமை அப்படி; நான் என்ன செய்யட்டும்!

மறுபடியும் நாளை வழக்கு மன்றத்திலாவது சந்திப்போம். வணக்கம்.

இங்ஙனம்,
ஜிம்மி.

—பாப் கடிதத்தைப் படித்து முடித்தான். விலங்கு பூட்டிய கரங்களை உயர்த்தி கொப்பளித்து நிற்கும் கண்ணீரைத் துடைத்துக் கொண்டான்.

நாளை வழக்கு மன்றத்திலாவது அருமை நண்பன் ஜிம்மியைச் சந்திக்கலாமென்ற நினைப்பில் மௌனமாக அந்த போலீஸ்காரனைப் பின் தொடர்ந்தான், அவன்!

[மூலம்: ஓ’ஹென்றி
தமிழில்: மாறன், எம். ஏ.]

## பிறைவானம்...

11-ம் பக்கத் தொடர்ச்சி

எதுவும் தென்படவே இல்லை. கல்லும், முள்ளும், கள்ளிக்காடுகளும், அகலக் கண் திறந்து காத்து நிற்கும் குருட்டு மதி படைத்த திருட்டுக் குழுவினரும் மலிந்த கோணல் வழிப் பாதைதான் அவன் திரும்பும் திசை எல்லாம் தெரிந்தன. கொடிய கரங்கள் விரித்து ‘வா வா’ என்று வரவேற்றன. முத்து நடுங்கியே போனான்.

உழைப்பான்; உழைக்கவோ இடமில்லை; கேட்கும் இடமெல்லாம் சரியான பதில் இல்லை; அப்படி கிடைத்தாலும் ஊதியமோ ‘கடுகளவு’! என்ன செய்வான்? அவன் தேடிவந்த நேர்மை எங்கே? அதைக் குழி தோண்டி புதைத்து விட்டு, கூத்தும் கும்மாளமும் அடிக்கும் கும்பல் அல்லவோ நாடெங்கும்—திசை எட்டும்—சிதறிக் கிடக்கிறது! அவன் உலகத்தைக் கண்டு வெட்கப்பட்டான். வேதனை நெஞ்சைப் பிளந்தது. தனி இடத்திலே அமர்ந்து யாருமறியாமல் விம்மி விம்மி அழுதான். பசியும் பட்டினியும் உடலை வருத்த வாட்டி வதைக்க, பரட்டைத் தலையும் பரிதாபக் கோலமும் கொண்டு நாதியற்றவனாகத் திரிந்து கொண்டிருந்தான், இரண்டு ஆண்டுகள்!

அப்போதுதான் ஒருநாள்—தன் தந்தையைச் சந்தித்தான், “அய்யோ! அப்பா!” என்று அலறிய வண்ணம்.

ஆமாம்; அவன் அப்பாவின் நிலை அவனை அலறத்தான் வைத்தது. “அடையாளம் தெரிகிறதா, என் அன்புள்ள மகனே? நீ ஓடிய பிறகுதான் நான் நமது ஈனத் தொழிலைப் பற்றி சிந்தித்தேன்; வெறுத்தேன். உழைக்க எண்ணினேன். அதன் விளைவுதானடா இது!...பருக்கை சோறு கண்டு பத்து நாட்களாகிறதடா!... என் நிலையைப் பாரடா!...... ஐயோ!...”

நடை பாதையிலே நாதியற்றவனாக உருண்டு கிடந்த மாயாண்டிதான் இப்படிப் புலம்பினான். முத்து தந்தையின் தாங்கொணா வேதனை கண்டு அழுதான்; அலறினான்; அதன் விளைவு?

❊

மறுநாள் அதிகாலையில் சந்தைத் திடலில் இப்படி முத்துவின் குரல் எழும்பியது.

“எங்கே...எங்கே ... எல்லோரும் பலமா கைதட்டுங்கோ... ம் ... பட படான்னு ... பட படான்னு......”

கழுத்திலே தொங்கிக்கொண்டிருந்த மத்தளத்தை ‘டமடம’ என்று தட்டி, கூட்டத்தை சேர்த்துக் கொண்டிருந்தான், தான் எட்டி உதைத்த செயலிடமே மீண்டும் தஞ்சமடைந்து விட்ட முத்துத் தம்பி!

—‘சொர்ணம்’

# பேனாவோவியம்

## ஆட்லி வந்தார்!

"இவர் மாபெரும் தலைவர் காந்தி வீட்டிற்குப் பெண் கொடுத்தவர். அதனால் இவரும் இப்போது மாபெரும் தலைவராகிவிட்டார்!"

❋

"இவர் தன்னிகரற்ற தலைவர் மோதிலால் நேருவுக்குத் தவப் புதல்வனாகப் பிறந்தார். அதனால்தான் அவருக்குப் பிறகு இவரும் தன்னிகரற்ற தலைவராகிவிட்டார்!"

—இந்திய உபகண்டத்து அரசியலில் இப்படியெல்லாம் பலர் தலைவராயிருக்கும் இந்த நேரத்திலேதான், உழைப்பையும் ஊக்கத்தையுமே மூலதனமாகக் கொண்டு பொது மக்கள் இடையே பெருமதிப்பு பெற்றிருக்கும் ஆட்லி வந்திருக்கிறார்.

அவர் அரசியல் வானிலே நட்சத்திரமாக விளங்கிக் கொண்டிருக்கும் இன்னொரு தலைவருக்குச் சம்மந்தியாக மாறி, அதன் காரணமாக சன்னத்துகள் பெற முயன்றாரில்லை.

அதைப் போலவே இயற்கை அவரை ஒரு தலைவரின் வீட்டிலே மகனாகப் பிறக்கச்செய்து ஒரு தலைவராக்கவில்லை.

தொழிலாளர்களோடு தோளோடு தோள் நின்று உழைத்தார்; உழைப்பின் பலனை—உழைப்பாளியின் நிலையை நேரில் கண்டார்—அதனால்தான் அவரும் ஒரு சோஷலிஸ்டாக மாறினார்!

'ஆனந்தபவன்'த்து மாடியிலே பிறந்து, பூங்காவிலும், பொய்கையிலும் தோய்ந்து, இன்று ஏழைப் பொது மக்களைப் புல்லென்று நினைத்துக் கொண்டு துரைத்தனம் நடத்தும் பண்டிதர்போல அவர் பேசும் சோஷலிசத்தில் காகிதப் பூவின் மணம் இருக்காது; காட்டு ரோஜாவின் கவின் இருக்கும்! ஏட்டுச் சுரைக்காயின் சுவை இருக்காது; எடுத்த கருமத்தை முடித்து விட்டே மறு வேலை பார்க்கும் 'செயற்கரிய செயல்' இருக்கும்!

அவர் முகாமிலிருந்து வெத்து வேட்டுக்கள் கிளம்பாது; வருவனவெல்லாம் அடுத்தவர் கண்ணுக்கு எடுத்துக் காட்டுகளாக இருக்கும்!

பண்டிதருடையது போன்ற வாய் வீரம்; வெட்டிப் பேச்சு; வெறும் வீராப்பு — இவை அனைத்தும் ஆட்லியிடம் அணுவளவுகூட இல்லை.

அவர் மிகக் குறைந்தன பேசும் குணக் குன்று; நிறைந்தன செய்யும் செயல் சிங்கம்!

அவர் வாழ்க்கையின் ஒவ்வொரு பகுதியும் அவரது உழைப்பின் பெருமையைத்தான் உலகுக்கு அறிவிக்கின்றன!

1893-ம் ஆண்டு ஒரு மத்திய வர்க்கத்துக் குடும்பத்திலே ஆட்லி பிறந்தார். இவரது தந்தையோ பழமைப் பிடிப்பு மிக்க ஒரு வக்கீல்!

அத்தகைய குடும்பத்தில் பிறந்தவர் பிறகு புதுக் கருத்துகள் ததும்பி வழியும் தொழிற் கட்சியின் தூணாக வருவார் என்று யாரும் எதிர்பார்த்திருக்க முடியாதுதான்!

சோஷலிசக் கருத்துக்களின் பால் அவர் கொண்ட ஈடுபாடு உணர்ச்சி வயப்பட்ட வாலிபன் ஒருவன் கன்னி ஒருத்தி மீது கொள்ளும் கண் மூடித்தனமான காதல் அல்ல!

அவரது உடலின் அணுவெல்லாம் இன்று சோஷலிசக் கொள்கை புகுந்து கொண்டிருக்கிறது!

1914-ம் ஆண்டு முதல் உலக யுத்தம் துவங்கியபோது ஆட்லியும் படை வீரர்களுள் ஒருவராகத் தன்னைப் பதிவு செய்து கொண்டார்.

அந்த இடைக்கால இராணுவ வாழ்க்கையின்போதுதான் அவர் அபாயங்களை அதிர்ச்சியின்றித் தாங்கிக் கொள்ளும் சக்தியையும், தலைவன் ஒருவனுக்கு இருக்க வேண்டிய குணங்களையும் பெற்றார்!

1922-ம் ஆண்டிலிருந்தே அவர் பாராளுமன்ற உறுப்பினராக இருந்து பணி புரிந்திருக்கிறார்!

1931-ம் ஆண்டு தொழிற் கட்சி முதன் முறையாக பதவி ஏற்றபோது போர் இலாக்காவின் 'அண்டர் செகரெட்டரி'யாகத் தொண்டாற்றும் வாய்ப்பு ஆட்லிக்குக் கிடைத்தது.

கட்சியின் தலைவராக இருந்த ராம்சே மாக்டொனால்டு மரித்த பிறகுதான் தலைமைப் பதவி ஆட்லியை இருகையேந்தி வரவேற்றது. அன்று முதல் இருபது ஆண்டுகள் வரை அரும் பாடுபட்டு, வெற்றி மேட்டிலும், தோல்விப் பள்ளத்தாக்கிலுமாக ஒரு குறைவுமின்றி ஆட்லி தொழிற் கட்சியின் தீபச் சுடரை ஆடாமல், பாதுகாத்து முன்னணிக்குக் கொண்டு வந்திருக்கிறார்.

ஆட்லிக்கு தனது கட்சி எந்த நேரம் பலவீனமாயிருக்கிறது என்பதும், அதன் காரணங்களும் மனப்பாடம்!

ஒரு சமயம் அவர் தெள்ளத் தெளிய அறிவித்தார், "தொழிற் கட்சியின் இன்றைய தேவை என் போன்ற விக்டோரியா காலத்துத் தலைவனல்ல; இந்தக் காலத்துச் சூழ் நிலையிலே வளர்ந்த தலைவர் ஒருவர் தேவைப்படுகிறார்,"—என்று!

அதன் படியே தக்க சமயத்தில்; தருணம் உணர்ந்து புதுத் தேர்தல் நடத்தி; ஹக் கெயிட்ஸ்கேல் என்னும் இளம் தலைவரிடத்திலே கட்சியை ஒப்புவித்து விட்டு ஒதுங்கிக் கொண்டார்.

பதவித் [illegible]லே ஈயாக, எறும்பாக விழுந்து கிடந்த ஆச்சாரியாரைப்போல [illegible] கட்சியிலிருந்தே விரட்ட[illegible]வில்லை; அவராக பதவியை ஒப்புவித்துவிட்டு விலகிக் கொண்டார்! வாலிபர்கள் ஆளட்டும்; வயோதிகம் [illegible] பெறட்டும்—[illegible]ற உண்மையை பதவிப் [illegible]த்தர்களுக்கெல்லாம் எடுத்தோதுவதைப் போல அவர் ஒதுங்கிக் கொண்டார்!

அத்தகைய உயர் எண்ணங்கள் படைத்த ஆட்லிதான் இன்று இந்த உப கண்டத்திற்கு வந்திருக்கிறார்.

அவரோடு அவர் அருமருந்தன்ன மனைவியார் திருமதி ஆட்லியும் வந்திருக்கிறார்.

திருமதி ஆட்லி ஒரு அடுப்பங்கரைப் பூச்சியல்ல; பூத்து வரும் புது உலகத்தின் முன்னோடி!

ஆட்லிக்கு நண்பர்; ஆலோசகர்; விமர்சகர்; உற்ற துணைவர்; அவர் காருக்கு டிரைவர்—இவை அத்தனையுமே திருமதி ஆட்லிதான்!

சென்ற பொதுத் தேர்தலிலும், அதற்கு முன்பு நடந்த பொதுத் தேர்தலிலும் தொழிற் கட்சியின் தலைவர் என்ற முறையில் நாடு முழுவதும் சுற்றி சோஷலிச கீதம் பாட வேண்டியிருந்தது ஆட்லி!

கண்ணுறங்காமல் கருமத்திலேயே கண்ணுயிருக்க வேண்டிய நேரம் தேர்தல் நேரம்!

அதில் ஒரு கட்சித் தலைவருடைய பொறுப்பு அந்தச் சமயத்திலே பல மடங்காகப் பெருகிவிடும்!

ஒவ்வொரு தொகுதிக்கும் செல்லவேண்டும்—

மாற்றுக் கட்சியின் குறைகளைக் கைப் புண்போல் எடுத்துக் காட்டவேண்டும்—

நாங்கள் பதவிக்கு வந்தால் இன்னின்னது செய்வோம்; இவையிவைகளை நிறை வேற்றுவோம் — என்பதைத் துணிவோடு சொல்லவேண்டும், மறுமுறையும் அந்தத் தொகுதிப் பக்கம் வரவேண்டுமென்பதை மறந்துவிடாமல்!

ஆட்லிக்கும் அந்த நேரம் வந்தது.

அவருக்குள்ள 'இல்மன்' காரிலே இங்கிலாந்து நாட்டையே வட்டமிட்டார்!

அப்போதெல்லாம் அவருக்குக் காரோட்டியாக இருந்தவர் யார் தெரியுமா?

அவருடைய மனைவியார்!

மனைவி என்பவள் குடும்ப வாழ்க்கையின் துணைவி மட்டுமல்ல; அரசியல் வாழ்க்கைக்கும் துணைவி என்பதை அவர் நிரூபித்து விட்டார்!

—வாலிப உலகத்துக்கெல்லாம் வழி காட்டியாக இருக்க வேண்டிய ஆட்லி தம்பதிகள் இப்போது சென்னை வந்திருக்கின்றனர்.

அவர்களுக்கு நல்வரவு கூறுகிறோம், தென்னகத்தின் உண்மையான பொதுவுடைமைக் கட்சி நாம்—என்ற முறையில்!

●

## தென்னிலங்கை...

※ 4–ம் பக்கத் தொடர்ச்சி

தம்பபன்னி என்று சிங்கள நூல்கள் இந்தத் தீவுக்கு இட்ட பெயரின் மருவென்கிறார்கள் இன்னொரு சாரார். தம்பபன்னி என்பதற்குச் செந்நிறமுடையது என்று பொருள். விஜயனும் அவன் பரிவாரமும் முதல் முதல் இந்தத் தீவில் இறங்கியபோது, களைப்பினாலும் அலுப்பினாலும் நடக்கச் சக்தியற்றுத் தங்கள் கைகளை ஊன்றிக் கொண்டிருந்தார்களென்றும், தங்கள் கைகள் செந்நிறம் படிந்தது கண்டு 'தம்பபன' என்று பெயரிட்டார்களென்றும் மகா வம்சம் கூறுகிறது. இந்த மாதிரி பல வேற்றுரைகள் சிங்கள மகா வம்சத்திலிருக்கின்றன. தென்னிந்தியாவில் தாமிரபரணி ஆற்றுக்கு அருகில் இருந்த தமிழர் இங்கே வந்து குடியேறிய போது இந்தத் தீவுக்கு இந்தப் பெயரிட்டார்கள் என்பதே பொருத்தம். தென்னிந்தியாவில் தமிழரைக் கண்ட பிற தேசத்தவர்கள் இங்கேயும் மகாவலி கங்கையையும் தமிழரையும் கண்டபோது இந்தத் தீவுக்கு அந்தப் பெயரை யிட்டு அழைத்தார்கள் என்றும் கொள்ளலாம். இதுவே ஸர். பொன். அருணாசலத்தின் கொள்கை. இப்போது பொதிய மலையிலே பிறந்து கிழக்கே ஓடி, கொற்கையிலே கடலோடு கலக்கிற தாம்பரபரணியாறு முன்னொரு காலத்தில், அதாவது அப்போதுள்ள கடல் கன்னியாகுமரி முனைக்கு வடபால் இல்லாத போது— கொற்கைக்கும் கிழக்கே ஓடி வந்து, இலங்கை வரையிலும் சென்று இலங்கைக்குள்ளும் புகுந்ததால், அந்த ஆற்றின் பெயரையே இலங்கைக்கு பெயராக வழங்கினார்களென்று நினைக்கலாம். ஆனால் இதற்குச் சான்றுகள் இனித்தான் கிடைக்க வேண்டும்.

"தாபிரபன என்ற பழம் பெயர் பூண்ட தீவை இப்போது சாலிக என்று குறிக்கிறோம்' என்று தொலமி என்பவர் எழுதியிருக்கிறார். சலாவ அல்லது சாலியர் என்ற ஒரு வகைச் சாதி இலங்கையில் உண்டு. இவர்கள் இலங்கைக்கே சிறப்பாக உரியவர்கள். முன்னொரு காலத்தில் கூலியாட்களாகவும், பின்பு கறுவாப்பட்டை உரிக்கும் தொழிலாளர்களாகவும் இவர்கள் வாழ்ந்து வந்தார்கள். இவர்களுடைய வரலாறு பலபடத் திரிந்து வழங்குவதால் உண்மை வரலாறு தெரியவில்லை. சாலிய என்பது சிலம் அல்லது சிழம் என்ற சொல்லின் மரூஉ என்பாரும் உண்டு. மலையாளத்தார் இதைச் 'சைலத்த' என்று பெயரிட்டழைத்தார்கள்.

சலாபம் என்பதற்கு முத்துக் குளித்தல் என்று பொருள். இந்தப் பெயரால் இந்தத் தொழிற் சிறப்பு மிகுந்த பட்டினமும் இலங்கையில் உண்டு. முத்துக்களாலும் வாசனைத் திரவியங்களாலும் லாபத்தை உண்டாக்கித் தன்னகத்தே பிற தேசத்து வணிகர்களை இழுக்கும் ஆற்றல் வாய்ந்த தீவு என்ற கருத்தில், சலா தீபம் என்றும் இலங்கைக்கு ஒரு பெயர் உண்டு.

முதல் புத்தரான காகுசந்தர் காலத்தில் இந்தத் தீவு ஓச்ச தீவம் எனவும். கோன கம்ம புத்தர் காலத்தில் மத தூவியம் எனவும், வழங்கி வந்ததென்று மகா வம்சம் குறிப்பிடுகிறது. புத்தரின் விரிவான வரலாற்று நூல்கள் அவர் இலங்கைக்கு வந்த வரலாற்றைக் கூறவில்லையென்று கருதுகிறார்கள் சில ஆராய்ச்சியாளர். ஓபிர், தர்ஷிஸ் என்று எபிரேயர் குறிப்பிட்ட இடத்தின் ஒரு பகுதி இலங்கை என்றும், சாலமோன் அரசன் தன் கப்பற்படை மூலம் பொன், வெள்ளி, யானை, மயில் தோகை முதலியவற்றை இங்கேயிருந்து பெற்றானென்றும் சொல்கிறார்கள். சிலர் சயாம் தேசத்தவர் இவைத் 'தேவலங்கா' என்று வழங்குகிறார்கள்.

※

## ஏன் வேண்டும்...

※ 2–ம் பக்கத் தொடர்ச்சி

பிக்க விரும்புகிறோம். மனித சமுதாயத்திற்காக அநீதியோடு போர் தொடுக்க நம்முடைய நானூறு மில்லியன் மக்களது சக்தியை உபயோகிக்கிறோம். ஆனால் வல்லரசுகளோ நம்முடைய அந்த எண்ணங்களைக் கண்டு பயந்து, நாம் ஏதோ விஷமான தத்துவத்தைப் போதிப்பதாகக் கருதுகின்றன. அதனால் இப்போது அவர்கள் சர்வ தேசியம் பற்றிப் பேசுகின்றனர். உலகத்தின் நாகரிகம் முன்னேறிக் கொண்டிருக்கும்போது; மனித இனத்தின் பார்வை விசாலமாகிக் கொண்டுவரும் போது தேசியத்தைப் பற்றியும் தேசிய இனத்தைப் பற்றியும் பேசுவது குறுகிய நோக்கம் கொண்டதாகவும்; நிகழ் காலத்திற்கு ஒத்து வராததாகவும் இருக்கிறது என்றும், அதனால் நாம் அதை விட்டுவிட வேண்டுமென்றும் கூறுகின்றனர். இந்த தத்துவத்தை நம்பி சீன யுவர்களில் சிலர் தேசியத்தை எதிர்ப்பதாகவும் தெரிய வருகிறது ஆனால் (சர்வ தேசியம் என்ற) இந்த வாதம் ஒரு முறை வழுக்கி விழுந்த இனங்கள் பேசக்கூடிய வாதமல்ல. (அன்னியர்களுக்கு அடி பணிந்து) ஒரு முறை தவறு செய்து விட்ட இனமாகிய நாம் நம்முடைய தேசிய விடுதலையையும், (இதர தேசங்களோடு) சமத்துவத்தையும் பெற வேண்டும்; அப்போதுதான் நாம் சர்வ தேசியம் பேசுவதற்கு லாயக்குள்ளவர்களாக ஆவோம்!"

சன்யாட்சன் கூற்றுப்படி ஒரு தேசிய இனத்தின் உரிமைப் போராட்டத்தால் கிடைப்பன;

(1) பூரண விடுதலை.

(2) இதர நாடுகளுடன் சமத்துவம்.

ஒரு தேசிய இனம் விடுதலை பெற்றுத் தனிநாடாகத் திகழ்ந்தால்தான் அதற்கு இதர நாடுகளுடன் சமத்துவம் கிடைக்கும்.

உதாரணமாக 1947–ம் ஆண்டு ஆகஸ்டு 15–ம் தேதிக்கு முன்பு இந்தியா என்கிற நாட்டின் அபிப்பிராயமென்பது அதை அடிமைப் படுத்தி வைத்திருக்கிற இங்கிலாந்தின் அபிப்பிராயமென்றுதான் சர்வதேச அரங்கிலே கருதப்பட்டுவந்தது. இன்று வெள்ளையன் கையிலிருந்து இந்த உபகண்டம் விடுபட்டது; அதன் பிறகுதான் இந்தியா இங்கிலாந்தின் நிழல் என்பது மாறி அதற்கு இதர நாடுகளுடன் சரிநிகர் சமானமாகப் பழகும்தகுதி ஏற்பட்டிருக்கிறது.

அதைவிட்டு தேசிய இனங்களின் சுயாட்சிப் பிரச்னைக்கு ஒரு முடிவு காணாமல் அகில உலக அரசாங்கம் ஒன்றை ஏற்படுத்துவது என்பது மறைமுகமாக ஒரு புதிய காலனி ஆதிக்கத்தை—தேசிய இனங்களை அடக்கி ஒடுக்க நினைக்கும் ஆதிபத்தியத்தை ஏகமனதாக ஆதரிக்கின்ற பிரச்சினைபோல் ஆகிவிடும்!

அகில உலக அரசாங்கம் பல தேசிய இனங்களை அடக்குவதற்காக ஏற்படப்போகின்ற அமைப்பல்ல; அதனால் சர்வ தேசியம் பேசுபவர்கள் முதலில் செய்ய வேண்டியது தேசிய இனங்களுக்கான உரிமைகளை வாங்கித் தரவேண்டியதுதான்!

அதனால்தான் டாக்டர் சன்யாட்சன் அழுத்தந் திருத்தமாகக் கூறினார்;

"...சர்வ தேசியம் என்பது தேசியத்திலிருந்துதான் முளைத்தெழுகிறது. 'சர்வ தேசியக் கொள்கைகளைப் பரப்ப வேண்டுமென்று நினைத்தால் முதலில் நாம் நமது தேசியத்தைப் பலமான முறையில் ஸ்தாபிக்க வேண்டும், தேசியம் பலமான முறையில் வேரூன்றுவதற்கேற்ற நிலைமை ஏற்படாவிட்டால் 'சர்வ தேசியமும்' பிறகு நன்றாகப் பிரகாசிக்க முடியாது!"

ஆக இதிலிருந்து தெளிவாவது என்னவெனில், தேசியம் என்பது தலைக் குழந்தை; இது பிறந்த பிறகுதான் கடைக் குழந்தையாகிய சர்வ தேசியம் பிறக்க முடியும்!

இன்னும் சொல்ல வேண்டுமானால் தேசியம் என்பது அஸ்திவாரம்; சர்வ தேசியம் என்பது அதற்கு மேல் எழுப்பப்படும் கட்டிடம்!

தேசியம் என்பது கோபுரம்; சர்வ தேசியம் என்பது அந்தக் கோபுரத்தை அலங்கரிப்பதற்காக வைக்கப்படும் கலசம்!

தேசியம் என்பது அரிச்சுவடி; சர்வ தேசியம் என்பது திருக்குறள்!

அரிச் சுவடியைக் கற்றுத் தேர்ந்த பிறகுதானே நம்மால் திருக்குறளைப் படிக்க முடியும்?

அதைப் போலத்தான்; தேசியத்தைப் பற்றித் தெரிந்து கொண்டு முதலில் சொந்தத்தில் ஒரு நாடு பெறுவோம்; பிறகு அகில உலக தேசியம் பெறுவோம் — இதுதான் சன்யாட்சன் போன்ற விடுதலை வீரர்களது அசைக்க முடியாத கருத்துக்கள்!

(தொடரும்.)

## தி. மு. க. செயலாளர்கட்கு வேண்டுகோள்

வழக்கம்போல் திராவிடர் நாட்குறிப்பு 1957–ம் ஆண்டுக்கும் வெளியிடப் படுகிறது. எல்லா தி. மு. கழக கிளைகளின் செயலாளர், துணைச் செயலாளர், பொருளாளர் பெயர்களையும் எந்த மாவட்டத்தைச் சேர்ந்தது என்ற விவரத்தையும் உடனே கீழ்க்கண்ட முகவரிக்கு எழுதியனுப்புமாறு கிளைக்கழக செயலாளர்களையும், மாவட்டச் செயலாளர்களையும் வேண்டிக்கொள்ளுகிறேன்.

காஞ்சி. மணிமொழியார்,
போர்வாள் அலுவலகம்.
147, பவழக்காரத் தெரு, சென்னை—1.

# பிடிக்காத தொழில்!

## பிறைவானம்

"எங்கே... எங்கே... எல்லோரும் ஒரு முறை பலமா கை தட்டுங்கோ!...ம்...இன்னும் ஜோரா ... படபடான்னு... படபடான்னு..." என்று கத்திக் கொண்டே, சூழ்ந்திருந்த சிறு கூட்டத்தினிடையே ஒரு முறை சுற்றினான், மாயாண்டி. கழுத்தில் தொங்கிக் கொண்டிருந்த மத்தளத்தை 'டமடம' என்று தட்டினான்.

மந்திரிகளுக்கு மக்கள் மன்றத்தில் கிடைக்கும் கைதட்டலை விட சற்று அதிகமாகவே சப்தம் எழும்பியது.

"இப்போ பாருங்கோ...நீங்க எப்போதும் பார்க்காத மந்திரத்தை!.........இதோ, இந்தப் பையன்...சிறு பையன்...தம்பி! தங்கக் கம்பி! உன் வயசென்ன சொல்லு!..."

"நூத்து இருபது...!"

"என்ன?"

"மாதங்களய்யா! அதாவது பத்து வருஷம்!...பத்து வயசு!"

"ஆ! அப்படிச் சொல்லு! நீ சின்னப் பையன்...நீ காளியம்மாவைப் பார்த்திருக்கிறியா?"

"பார்த்திருக்கிறேன், சினிமாவிலே!"

"குறும்புக்காரப் பயலே! நான் நிஜக்காளியைச் சொல்லுகிறேன் ... கல்கத்தா காளியை! நீ பேசி யிருக்கியா அதோட!"

"இல்லே...இல்லே..."

"ஏன்?...ஏன்...?"

"அது கல்கத்தா காளி! தமிழ் புரியாது!..."

கூட்டத்தினிடையே சிறு சிரிப்பொலி எழும்பியது. மாயாண்டி தன் கையிலிருந்த மத்தளத்தை ஒருமுறை வேகமாகத் தட்டிக் கொண்டான்.

"ஐயாமார்களே! இந்தப் பையனை—உங்க முன்னாலே சிரிச்சுப் பேசுறானே இவனை—இதோ சாகடிக்கப் போகிறேன்...அவன் ஆவி நேரா காளியம்மா கிட்டே போகும்! ஆமா; காளியம்மா கிட்டே போகும்...அந்த சக்தியாலே இவன் பேசுவான்!......நீங்க என்ன சட்டைப் போட்டிருக்கீங்கன்னு—என்ன துட்டு வச்சிருக்கீங்கன்னு — என்ன நினைக்கிறீங்கன்னு — சொல்லுவான்........காளியம்மா தயவாலே!..." என்றான் மாயாண்டி!

சிறிது நேரத்திற்கெல்லாம் சிறுவன் 'செத்துப் போனான்!' மாயாண்டி என்னென்னவோ கேட்டான்; அந்தப் பையனின் 'பிணமும்' பேசியது. அவர்களுடைய ரகசிய பாஷை புரியாத மக்கள் ஆச்சரியப்பட்டார்கள். 'அம்மவோ!' என்று வியந்தனர்!

"சீமான்களே! பார்த்தீர்களா, மந்திரத்தை......அதன் மகாத்மியத்தை!.......அதோ, அந்த பரிதாபத்திற்குரிய சிறுவனின் பிணத்தையும் பார்த்தீர்களா? மனதிறங்கி ஏதேனும் சில்லரை போடுங்க.......இந்த ஏழைங்களின் ஒரு சாண் வயிற்றையும், எண்சாண் உடலையும் பாருங்க....காலணா, அரையணா, ஓரணா, இரண்டணா—இஷ்டத்தைத் தாருங்கோ..."

—கையிலே தட்டொன்றை எடுத்துக்கொண்டு மாயாண்டி கூட்டத்தை வலம் வந்தான். 'கணீர், கணீர்' என்ற சப்தத்துடன் சில்லரைக் காசுகள் அவன் தட்டில் விழுந்தன.

கூட்டம் கலைந்து விட்டது. சில்லரைக் காசுகளை எண்ணிய படியே 'பிண'த்திடம் வந்தான் மாயாண்டி. மெதுவாகக் கண்களைத் திறந்து பார்த்த அந்தச் சிறுவன், கூட்டம் இல்லை என்று தெரிந்ததும், 'சடக்' கென்று எழுந்து உட்கார்ந்தான். "எட்டு ரூபாயும் நாலரை அணாவும் சம்பாதிச்சுட்டேண்டா, முத்து!" என்று பெருமையோடு சொன்னான் மாயாண்டி!

அதைக் கேட்டு முத்து—அந்தச் சிறுவன்தான் சிறிதும் மகிழ்ந்ததாகக் காணோம். "சம்பாதிக்க வில்லையப்பா—திருடினோம்!" என்றான், சற்று பதட்டத்துடன்!

மாயாண்டி முத்துவின் முகத்தைக் கோபமாகப் பார்த்தான்.

"பின்னே என்னப்பா; இதுவும் ஒரு பிழைப்பா! இப்படி ஏச்சுப் பிழைப்பதைவிட நாக்கைப் பிடுங்கிக் கொண்டு சாகலாமேயப்பா!...அதோ பாருங்கள், அந்த வயல் வெளியிலே! வாட்டும் வெயில்தான்; ஆனாலும் அதில் வேலை செய்யும் ஏழை உழவர்களின் முகத்தில் எத்தனை மகிழ்ச்சி! ஆலைச் சங்கின் ஒலி கேட்டதும் அணி வகுத்தாற்போல் செல்லும் தொழிலாளத் தோழர்களின் உள்ளத்தில் எத்தனை நிம்மதி குடிகொண்டிருக்கும் தெரியுமா! உழைப்பு — என்றுமே மாற்று குறையாத தங்கமப்பா! அவர்களுக்கெல்லாம் அந்த உறுதியான உழைப்பு தானப்பா மூலதனம்! ஆனால் நாமும்தான் பொய் சொல்லி, மந்திரம் என்று மாயை காட்டி, பணம் பறிக்கிறோம்—வயிறு முட்ட சாப்பிடுகிறோம் — வெட்க மில்லாமல்—மான ல்லாமல்!..."

"முத்து!"—இடை மறித்துக் கத்தினான் மாயாண்டி!

அநீதியைக் கண்டு வெட்கிய அந்தச் சிறுவன் தன் தந்தையின் மிரட்டலைக் கவனியாமல், எங்கேயோ கவனித்துக் கொண்டிருந்தான். அவனது கண்களில் ததும்பி நின்ற கண்ணீர், அவனது மன வேதனையை—அது தரும் வாதனையை வெளிப்படுத்தியது.

இந்த துன்பத்தை அவன் இன்று நேற்று அனுபவிக்க வில்லை, விபரம் தெரிந்த நாள் முதல்—தன் தந்தையின் கூத்தாடிக் கும்பலில் தானும் ஒருவனாக சேர்ந்த தினம் முதல்—'அடுக்குமா இந்த அநியாயம்?' என்றுதான் கேட்டு வருகிறான். மாயாண்டியின் பரம்பரைத் தொழில் அது; தன் மகனுக்கும் கற்றுத் தந்துவிட வேண்டியது தானே என்று விரும்பினான். ஆனால் முத்துவோ—பைத்தியக் காரன்—ஏய்த்துப்பிழைப்பதை விட தற்கொலை செய்து கொண்டு சாகலாம் என்ற சித்தாந்தத்தைத் தந்தைக்குத் திருப்பிப் படித்தான். தங்கள் தொழில் மட்டுமே ஈனத் தொழில் என்று எண்ணிவிட்டான் அவன்.

மாயாண்டி மகனது மனதைத் திருப்பிவிட என்னென்னவோ முயற்சிகள் எடுத்துப் பார்த்தான். பசுமரத்தாணி போல் அந்த குருத்து நெஞ்சிலே பதிந்துவிட்ட தன்மான உணர்வு ஏனோ அடங்கி, ஒடுங்கி, செத்துவிட மறுத்தது.

"முத்து!...பக்கத்துத் தெருவிலே இன்னைக்கு சந்தையாம்!...புறப்படு...நல்ல பணம் கிடைக்கும்..." என்றான் மாயாண்டி!

"முடியாது; என்னாலே முடியவே முடியாது அப்பா! நான் எங்கேயாவது ஓடியேப் போயிடப் போறேன்!"

"என்ன...?..."

"ஆமாம்பா! இந்தப் பிச்சைக்கார பிழைப்பை என்னால் இனிமேல் சகிக்கவே முடியாது!..."

"பிச்சைக்கார பிழைப்பா? இதோ பாரடா முட்டாளே, அந்த பிச்சைக்காசு—பத்து ரூபாய் நோட்டுகளாக உருமாறி இருப்பதை...!"—ஆவேசத்துடன் கத்திய மாயாண்டி, தன் இடையிலிருந்து நான்கைந்து பத்து ரூபாய் நோட்டுகளை எடுத்து நீட்டினான்.

முத்து தன் கண் எதிரே இருந்த அந்த நோட்டுக்களை ஒரு கணம் வெறிக்கப் பார்த்தான். மறுகணம் அவன் கண்களில் ஏதோ ஒரு வெறி தோன்றியது. 'சட்' டென்று பக்கத்தில் கிடந்த நெருப்புப் பெட்டியை எடுத்தான்; குச்சி ஒன்றை பற்ற வைத்தான்; நோட்டுகளைப் பிடுங்கினான்; தீயிலே காட்டினான். "தீயவழி வந்த பணம் தீயுக்குத்தான் இரையாக வேண்டும் அப்பா!" என்றான்.

"ஐயையோ! பாவி!" என்று அலறிய மாயாண்டி, முத்துவின்மேல் பாய்ந்தான். ஆனால் நழுவிவிட்ட முத்துவோ, "நேர் வழியிலே சென்று பிழைத்துக் கொள்ள நான் போகிறேனப்பா!" என்று ஓடியே போனான்.

சமுதாயத்தின் பயங்கரமான ஏற்றத் தாழ்வுகளைப் பிறப்பிக்கும் அந்த ரூபாய் நோட்டுகள் சாம்பலாகி விட்டன.

ஆத்திரத்தால் தடுமாறினான் மாயாண்டி. என்றாலும், அவன் கண்களில் ஏனோ கண்ணீர் ததும்பியது.



✻

ஓடிய முத்து எங்கு போனான்? அவன் திரும்பி வந்தானா? அநீதியை எதிர்த்து, அன்புத் தந்தையை மறந்து ஓடினானே, அவன் நிலை என்ன வாயிற்று? — என்று நீங்கள் எழுப்பும் கேள்விகள் என் காதில் விழுகின்றன.

முத்து தன் தந்தையை மீண்டும் சந்திக்கத்தான் செய்தான். ஆனால் எத்தனையோ இன்னல்களுக்குப் பிறகு—'உலகம் என்பது இதுதானா?...அதிலே உலவுகின்ற கொடுமைகள் இத்தனை கோடிகளா?' என்று கண்ட பிறகு...

நேர்வழியைத் தேடி ஓடின முத்துவுக்கு, அத்தகைய வழி

✻ தொடர்ச்சி 8-ம் பக்கம்

வரதன்; மணப்பாறை.

(?) பொட்டி ஸ்ரீராமுலு; சங்கரலிங்க நாடார்—இவர்களின் தியாகங்களின் பலன்...?

ஸ்ரீராமுலுவின் மரணத்தால் ஆந்திரா கிடைத்தது! சங்கரலிங்கனாரின் மரணத்தால், 'பச்சைத் தமிழ'ருக்கு ஜுரம் கண்டிருக்கிறது!

டேனியல்; பிரம்பூர்.

(?) தி. மு. க. இதுவரை நாட்டிற்கு செய்த நல்ல காரியங்கள் என்ன?

அது உதயமானதே இந்த நாட்டிற்கு நல்லதற்குத்தானே, நண்பரே!

கண்ணன்; அயன்புரம்.

(?) நீர் இந்தியாவின் ஜனாதிபதியானால்...?

உஸ்...எனக்கு எதற்கய்யா அந்த சோம்பேறி உத்தியோகம்!

சிதம்பரம்; பாகனேரி.

(?) படிப்பறிவுக்கும், பகுத்தறிவுக்கும் உள்ள வித்தியாசம் என்ன?

படிப்பறிவு குரோட்டன்ஸ் செடி; தினந்தினம் தண்ணீர் ஊற்றிப் பாதுகாக்க வேண்டும்! பகுத்தறிவு இயற்கைதரும் உரத்தால் வளரும சந்தனத் தரு!

எஸ். வாசுதேவன்; திருச்சி.

(?) ஆண்டவன் தூங்கிவிட்டால் என்ன நேரும்?

ஆண்டவன் எப்போதும் தூங்கிக் கொண்டிருப்பதால் தானே தனது நகைகளையே 'கோட்டை விட்ட'தாக பத்திரிகைகளில் செய்திகள் வருகின்றன!

மு. சாகுல் ஹமீது; சிறுதாரை.

(?) காமராசரை தலையில் வைத்துக் கொண்டு கூத்தாடும் பெரியார், அவரை "இவன் துரோகி! அக்கிரமக்காரன்!" என்று தன் வாயாலேயே எப்போது ஏசுவார்?

சென்ற பொதுத் தேர்தலில் கம்யூனிஸ்டுகளை பெரியார் ஆதரித்தாரே; தேர்தலுக்குப் பிறகு அவர்களுக்கும் நீர் சொல்லும் 'அர்ச்சனை'கள் கிடைக்கவில்லையா! இன்னும் சிறிது காலம் பொறுத்திரும நண்பரே!

ஏ. கோ. கருணாகரன்; பழனி.

(?) கடவுளைத் தோற்றுவித்தது யார்?

எத்தர் குலத்தின் எழுத்தாணி! பின் அவ்வழி வந்த சிற்பிகள்; சித்திரக்காரர்கள்!

(?) புல்கானினுக்கு நம் அரசாங்கத்தால் கொடுக்கப்பட்ட ஆடம்பரமான வரவேற்பு இப்போது வந்திருக்கும் ஆட்லிக்கு இல்லையே, ஏன்?

புல்கானின் பதவியில் இருப்பவர்; ஆட்லி பதவியில் இல்லாதவர்!

பி. எஸ். சங்கரன்; மதுரை.

(?) இலட்சியத்தின் முன்னே இடையூறுகள் இருக்கத்தான் செய்யுமா?

மூச்சை நிறுத்தி உயிர் பறிக்கும் பயங்கர அலைகளும், உடல் விழுங்கக் காத்திருக்கும் பாழும் திமிங்கிலங்களுக்கும் மத்தியிலே தானே தோழரே, முத்தெடுக்க வேண்டும்!

(?) மத கிரந்தம் என்பது என்ன?

உதாரணம் வேண்டுமா? கம்யூனிஸ்ட்களிடம் மார்க்ஸ் மாட்டிக்கொண்டு விழிக்கவில்லையா—அதைப் போன்றதுதான்!

(?) தியாகி சங்கரலிங்கனாருக்கும், மொரார்ஜி தேசாய்க்கும் என்ன வித்தியாசம்?

மொரார்ஜி தேசாய் குஜராத்திப்பண மூட்டைகளின் பாது காவலர்; சங்கரலிங்கனார் ஒரு சாமானியர்—அதனால்தான் ஏழைச் சொல் காங்கிரஸ் அம்பலத்தில் ஏறவில்லை, தோழரே!

எஸ். எஸ். கோமதி சுப்ரமணியன்; மேலகற்கண்டார் கோட்டை

(?) மொரார்ஜி தேசாய் ஏன் பம்பாய் மந்திரியாகவில்லை?

இது தெரியாதா, உமக்கு? காங்கிரஸ் ஆட்சியில் ஒரு 'புள்ளி' மாநில மந்திரியாகவில்லையென்றால், அவர் மத்திய மந்திரியாகிறார் என்று அர்த்தம்! அதுவும் இல்லையெனில் அவருக்குக் கவர்னர் பதவி காத்திருக்கிறது என்று அர்த்தம்! இதற்கு ஆச்சாரியார் மட்டும் விதிவிலக்கு!

---

*நமது பொதுக்குழு உறுப்பினரும், நடிக நண்பருமான நடிகமணி டி. வி. நாராயணசாமி அவர்களின் துணைவியார் ஒரு ஆண் மகவுக்குத் தாயானார்கள் என்ற செய்தி கேட்டு மகிழ்கிறோம்.*

---


## நவம்பர் முதல் நாள் விற்பனைக்குக் கிடைக்கும்!

❋

## நெஞ்சை அள்ளும் கொஞ்சு தமிழ்க் காவியம் புத்தக வடிவில் வருகிறது!

# 'ரங்கோன் ராதா'

[வசனப் புத்தகம்]

விலை 8 அணா

கதை: அறிஞர் அண்ணா

வசனம்: மு. கருணாநிதி

விற்பனைக் கழிவு 40 சதவீதம்

தேவையான பிரதிகளுக்கு கழிவு நீக்கி முன்பணம் அனுப்பி இப்போதே பதிவு செய்து கொள்ளவும்.

முத்து பாரு பதிப்பகம், :: சென்னை 6.


## 21—10—56:

★

## நாட்டுக்கு உயிர் ஈந்த உத்தமர் சங்கரலிங்கனார் நாள்

பொதுச்செயலாளர் வேண்டுகோள்

*சென்னை மாநிலத்திற்குத் தமிழ்நாடு என்று பெயர் வைப்பதில் தனிப் பெரும் ஆர்வம் கொண்டு அதற்கான முயற்சியில் தன் உயிரையே ஈந்த தமிழ் நாட்டின் உத்தமர் விருதுநகர் தோழர் சங்கரலிங்கனார் அவர்களுக்கு வீர வணக்கம் தெரிவிக்கவும், அவர் கண்ட கனவை நனவாக்கும் முயற்சியில் நாம் ஈடுபட உறுதி கொள்ளவும், 21—10—56 ஞாயிற்றுக்கிழமையை உத்தமர் சங்கரலிங்கனார் நாளாகக் கொள்ள வேண்டுகிறேன்.*

*அன்று, பொதுவாகத் தமிழ்ப் பெருங்குடி மக்கள்—குறிப்பாகத் திராவிட முன்னேற்றக் கழகத் தோழர்கள், ஊர்வலங்கள் நடத்துதல், பொதுக் கூட்டங்கள் கூட்டுதல் ஆகிய பணிகளின் மூலம், சங்கரலிங்கனாரின் உணர்ச்சியை அரசியலாருக்கு நினைவூட்டுமாறு கேட்டுக் கொள்கிறேன்.*

திராவிட முன்னேற்றக் கழகக் கிளைகள் இப்பணியை [வாய்ப்புள்ள இடங்களில் பிற கட்சிகளின் கூட்டுறவைப் பெற்று] இனிது நிறைவேற்றி வைக்குமாறு வேண்டிக் கேட்டுக் கொள்கிறேன்.

'அறிவகம்'
சென்னை-13.
18—10—56

**இரா. நெடுஞ்செழியன்,**
பொதுச்செயலாளர், தி. மு. கழகம்.

ஆசிரியரும், அச்சிடுபவரும், வெளியிடுபவரும் மு. கருணாநிதி, 'முரசொலி' அச்சகம், 4-128, மவுண்ட் ரோடு சென்னை-6.